# குஜராத் வன்கொடுமைகளின் சிறப்புக் குறியிலக்குகள்
# பெண்களும் குழந்தைகளும்

**முன்னுரை**

1991இல் தொடங்கப்பட்ட ‘தமிழகப் பெண்கள் ஒருங்கிணைப்பு இயக்கம்’ பெண்ணுரிமை, பெண் விடுதலை, பெண் தோழமை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. பெண்ணிய நோக்கிலான சிந்தனையை வளர்த்தெடுப்பதும் பெண்களின் வாழ்வு, வருங்காலம் பற்றிய பல்வேறு கருத்துகளை விவாதிப்பதும் இவ்வியக்கத்தின் முக்கியக் குறிக்கோளாகும். இவ்வகையில் கடந்த இரண்டு ஆண்டுகளாக “பெண்களும் மதமும்“ என்ற தலைப்பையொட்டி இவ்வியக்கத்தினர் பல கருத்துக்களை, செய்திகளைப் பகிர்ந்து கொண்டும், பெண்களின் வாழ்நிலைமைகளுக்கும் மதங்களின் கோட்பாடுகளுக்கும் இடையேயுள்ள முரண்பட்ட உறவுகளைக் குறித்து உரத்துச் சிந்தித்தும், எத்தகைய உளவியல் தேவைகளை மத நம்பிக்கையும் மத நிறுவனங்களும் நிறைவேற்றுகின்றன என்பன போன்றவற்றை ஆராய்ந்தும் வந்துள்ளனர். “பெண்களும் மதவெறி அரசியலும்“ என்ற தலைப்பில் பல உரையாடல்களை மேற்கொள்ள கடந்த ஆண்டு தமிழகம் தழுவிய மூன்று நாள் மாநாடு ஒன்றை நடத்த இந்த இயக்கம் திட்டமிட்டிருந்தது. ஆனால் தவிர்க்க இயலாத காரணங்களால் அம்மாநாட்டினைக் கூட்டுவதற்கான வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. இந்த ஆண்டு பிப்ரவரி மாதம் தொடங்கி குஜராத் மாநிலத்தை அலைக்கழித்துவரும் இந்து மதவெறி அரசியலின் பேயாட்டத்தைப் பார்க்கையில், இத்தகைய உரையாடல்களையும் விவாதங்களையும் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டிய தேவையை நம்மால் உணரமுடிகிறது. குஜராத் படுகொலைகளிலும் பாலியல் வெறிச் செயல்களிலும் வெளிப்பட்ட வன்மமும் வக்கிரமும் வெறுப்பும் நம் மனங்களை ஆழமாகக் காயப்படுத்தியுள்ளன. இத்தகைய கோரச் செயல்கள் நடந்து கொண்டிருக்கையில், நம்மால் ஒன்றும் செய்ய முடியவில்லையே என்ற குற்றவுணர்வும், இயலாமையுணர்வும் நமக்கு ஏற்பட்டுள்ளன. குஜராத் நிகழ்ச்சிகள் குறித்து வெளியிடப்பட்டுள்ள பல்வேறு அறிக்கைகளிலிருந்தும் செய்திகளிலிருந்தும் அந்த மாநிலத்தில் நடந்தேறிய கொடூரங்களின் பல்வேறு பரிமாணங்களும் நுணுக்கங்களும் நமக்குத் தெரிய வந்துள்ளன.

- முஸ்லிம் இன மக்கள் குறிவைத்துத் தாக்கப்பட்டது,
- முஸ்லிம் வீடுகளும், சொத்துக்களும் சூரையாடப்பட்டது, எரிக்கப்பட்டது,
- பல இடங்களில் முஸ்லிம் மக்கள் தாங்கொணாத சித்திரவதைகளுக்கும் பாலின இழிச்செயல்களுக்கும் ஆட்படுத்தப்பட்டுக் கொல்லப்பட்டது,

- முஸ்லிம் பெண்களும் குழந்தைகளும் சொற்களால் எடுத்துக்கூற முடியாத பாலியல் வன்கொடுமைகளுக்குப் பலியானது,
- பலாத்காரம் செய்யப்பட்ட, சித்திரவதை செய்யப்பட்ட மனிதர்களின் சடலங்கள் குவித்து எரிக்கப்பட்டது,
- முஸ்லிம் மக்களின் சமயவுணர்வுகளின் அடையாளங்களாக உள்ள பள்ளிவாசல்களும் தர்க்காக்களும் தரைமட்டமாக்கப்பட்டது,
- இந்து சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், சாதி, வர்க்க வேறுபாடின்றி முஸ்லிம் மக்களைத் துன்புறுத்தி அழித்தது, சில இடங்களில் இவர்களுடன் ஆதிவாசிகளும் சேர்ந்து கொண்டது,
- குஜராத் மாநில அரசும், மக்கள் பிரதிநிதிகளும், நிர்வாக, காவல் துறையினரும் அங்கு நிகழ்ந்த வன்கொடுமைகளை ஊக்குவித்தது, அவை நடைபெற உடந்தையாய் இருந்தது,

இவை குறித்து ஏராளமான தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன - மனித உரிமை அமைப்புகள், பெண்ணுரிமை இயக்கங்கள், பொதுமக்களை உள்ளடக்கிய உண்மை அறியும் குழுக்கள், மருத்துவர்கள், வழக்குரைஞர்கள் போன்ற பல்வேறு தரப்பினர் அம்மாநிலத்திற்கு மார்ச் 2002 முதற்கொண்டே பயணம் மேற்கொண்டுள்ளனர் பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்துப் பேசியுள் தமது மண்ணிலேயே அகதிகளாக வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளவர்களின் ஓலக்குரல்களைப் பதிவு செய்துள்ளனர் குஜராத் அரசின் அகம்பாவ, அலட்சிய நிலைப்பாட்டினை, நிகழ்ச்சிகள் நடந்து முடிந்து பல நாட்கள் ஆகியும் நிவாரணப் பணிகளைச் சரிவர மேற்கொள்ளாத அதன் மெத்தனப் போக்கினைக் கண்டித்துள்ளனர்.

இத்தனை அறிக்கைகளும் செய்திகளும் சொல்லி வைத்தாற்போல ஒரு விஷயத்தை முக்கியமானதாக அடையாளப்படுத்தியுள்ளன: குஜராத் வன்கொடுமைகளின் முக்கியக் குறியிலக்குகள் பெண்களும் குழந்தைகளும் ஆவர். எல்லா வகுப்புக் கலவரங்களிலும் பெண்கள் குறிப்பிட்ட வகைகளில் பாதிக்கப்படுகின்றனர் என்பது நாம் எல்லோரும் அறிந்ததுதான். வகுப்பு மோதல், சாதிக் கலவரம் ஆகிய எதுவாக இருந்தாலும் குறிப்பிட்ட வகுப்பின், சாதியின் அடையாளத்தை முன்நிறுத்தவும், அழிக்கவும் பெண்ணின் உடல் பயன்படுத்தப்படுகிறது. சாதி, சமய அடையாளங்கள் யாவும் பெண்ணின் உடலில், அவளது பிறப்புறுப்புகளில்தான் அடங்கியுள்ளன என்ற நம்பிக்கை, எண்ணம், மனப்பான்மை ஆணாதிக்கச் சமுதாயங்களில் இருப்பதால் பெண், அவளுக்கென்றே தேர்ந்தெடுக்கப்படும் வன்முறைகளுக்கு உட்படுத்தப்படுகிறாள்.

குஜராத்திலும் இத்தகைய மனப்பான்மை அதற்குரிய உள்ளார்ந்த குரூரத்துடன் வெளிப்பட்டது. ஆனால் பாலியல் வன்முறை இங்கு கூடுதலான வெறுப்புடன், வெறியுடன் மேற்கொள்ளப்பட்டது. சிறுமிகள் சிதைக்கப்பட்டனர் பெண்களின் உடல்கள் தாக்கப்பட்டதுடன் சித்தரவதைக்கு ஆளாக்கப்பட்டன் நிறைமாத கர்ப்பிணிப் பெண்களின் வயிறுகள் கிழிக்கப்பட்டு சிசுக்கள் வெளியேயெறியப்பட்டுக் கொளுத்தப்பட்டன குழந்தைகளின் கண் எதிரே தாய்மார்கள் பலாத்காரமும் செய்யப்பட்டனர். பல பெண்களின் பிறப்புறுப்புகள் கிழிக்கப்பட்டு அவற்றுக்குள் உருளைக் கட்டைகளும் மரக்கட்டைகளும் திணிக்கப்பட்டன. விஸ்வ இந்து பரிசத் வெளியிட்ட துண்டறிக்கை ஒன்று முஸ்லிம் பெண்களைப் பலாத்காரம் செய்வதை ஒரு கேளிக்கையாக, இந்து ஆண்கள் மேற்கொள்ள வேண்டிய திருவிழாவாக வருணித்தது:

> அமைதியாக இருந்த எரிமலை கனல்கக்கத் தொடங்கிவிட்டது.
> முஸ்லிம் ஆண்களின் புட்டங்களை அது எரிக்க
> அவர்கள் நிர்வாண ஆட்டம் ஆடுகின்றனர்.
> ஆண்குறிகளைக் கட்டுக்குள் வைத்திருந்த தளைகளை நாங்கள் அகற்றி
> முஸ்லிம் பெண்களின் பிறப்புறுப்புகளை விரியச் செய்துவிட்டோம்.

இத்தகைய நிகழ்வுகளைப் பற்றிப் பேசும்போதும், அவற்றை திரும்பத்திரும்ப நினைத்துப் பார்க்கும்போதும், நம்மையறியாமல் அவற்றின் நுணுக்கங்களை விலக்கிவிட்டு அவற்றை ஒரு “கொடூர“ மான செயலாக மட்டுமே, அதாவது முஸ்லிம் பெண்களுக்கு நேர்ந்த “கொடுமை“ என்ற ஒரு கருத்தாக மட்டுமே அவற்றைக் காண நம் மனம் விழைகிறது. அப்பெண்கள் எதிர்கொண்ட இழிசொற்களையும், சித்திரவதைகளையும் பற்றித் தொடர்ந்து படிக்கவோ, பேசவோ நம்மால் முடிவதில்லை: “முஸ்லிம் பெண்களுக்கு நேர்ந்த கொடுமை“ என்ற வகையில், நடந்த நிகழ்ச்சிகளை ஒரு கருத்துருவமாகக் குறுக்கி ஏற்றுக்கொள்வதையே மனமும் அறிவும் விரும்புகின்றன.

ஆனால் இந்தக் கொடூரங்களின் தனித்தன்மை, அவற்றின் குறிப்பிட்ட செயல்கள், அவற்றிற்குப் பின்னால் உள்ள உளவியல், அந்த உளவியலுக்கு ஆதாரமான அரசியல், அந்த அரசியலின் பிரிக்கமுடியாத கூறாக ஆகியுள்ள பாலியல் வன்மம் ஆகியவற்றின் திட்டவட்டமான வடிவமைப்புகளை, விவரங்களை, நுணுக்கங்களை நாம் தொடர்ந்து நினைவு கொள்வது தேவையாகிறது. காரணம், குஜராத் சம்பவங்களின் தனித் தன்மையை நாம் மறந்துவிடக்கூடாது. இதுவரை இந்த நாட்டில் நடந்துள்ள

கலவரங்கள், வன்முறைச் செயல்கள் ஆகியவற்றில் புலப்படாத வெறுப்பும், அவ்வெறுப்பினை நியாயப்படுத்தும் கருத்தியலும் குஜராத் நிகழ்வுகளினூடாக, குறிப்பாக பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் ஏற்பட்ட கொடுமைகளினூடாக வெளிப்பட்டுள்ளன. இதைத்தான் நாம் மேற்கோள் காட்டியுள்ள விஸ்வ இந்து பரிசத்தின் பாட்டு குறிக்கிறது.

ூஇப்பாட்டு மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ள கட்டுரை: Tanika Sarkar,***Gujarat: Semiotics of Terror,*** Economic and Political Weekly, July 13, 2002.

## குஜராத் படுகொலைகள்:
## பெண்களும் குழந்தைகளும்

குஜராத்தில் கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறையை நியாயப்படுத்தும் வகையில் திரும்பத் திரும்பத் கூறப்படும் வார்த்தைகள் : “இது ஒரு பதிலடி. கோத்ராவில் கரசேவகர்கள் பயணம் செய்து வந்த இரயில் பெட்டியை முஸ்லிம் வெறியர்கள் எரித்தனர். அதற்குப் பழிவாங்கும் முகமாகவே இந்துக்கள் கொதித்தெழுந்தனர்.“

உண்மையில் நடந்தது என்ன? கோத்ராவில் இரயில்பெட்டி எரிந்து சாம்பலாகியதும், மிகக் கோரமான வகையில் 58 போர் உயிர் நீத்ததும் நாடறிந்த செய்திகள். ஆனால் இன்றுவரை அச்சம்பவத்தை குறித்த ஆதாரபூர்வமான தகவல்கள் எவையும் வெளிவரவில்லை.

கோத்ரா கொடூரம் நிகழ்வதற்கு முன் நடந்த சில நிகழ்வுகள் குறித்த செய்திகள் நமக்குக் கிட்டியுள்ளன. அதாவது, கோத்ரா இரயில் நிலையத்தில் முஸ்லிம் பெண் ஒருவரை சில கரசேவகர்கள் கேலி செய்து, இழிவுபடுத்த முயன்றனர். இதைத் தொடர்ந்து அவர்களுக்கும் அந்தப் பகுதி முஸ்லிம்களுக்கும் இடையே கைகலப்பு நடந்திருக்கிறது. பிறகு இரயில் பெட்டி எரிந்தது. எனினும் யார், எப்படி ரயில் பெட்டிக்குத் தீ வைத்தனர் என்பதை இதுவரையிலும் யாராலும் உறுதிபடக் கூறமுடியவில்லை. ஆனால் இச்சம்பவம் குறித்த செய்திகள் வெளிவந்தவுடன் பலதரப்பட்ட வதந்திகள் கிளம்பின. இன்னும் சொல்லப்போனால் கிளப்பிவிடப்பட்டன. ***“சந்தேஷ்”*** என்ற குஜராத்தி மொழிப் பத்திரிக்கை, கோத்ரா சம்பவம் நடந்த மறுநாள் விஷமத்தனமான செய்தி ஒன்றினை வெளியிட்டது. முஸ்லிம் மதவெறியர்கள் சபர்மதி எக்ஸ்பிரஸிலிருந்து 15 இந்து பெண்களைத் தூக்கிச் சென்றுவிட்டனர் என்பதுதான் அது. (***சந்தேஷ்,*** 28.02.2002) மார்ச் 1, 2002 இதழில் மற்றுமொரு செய்தியை அந்த நாளேடு வெளியிட்டது: முஸ்லிம்களால் தூக்கிச் செல்லப்பட்டவர்களில் இருவர் பாலியல்

வன்முறைக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர். அவர்களது மார்பகங்கள் வெட்டி எறியப்பட்டன. பிறகு அவர்கள் கொல்லப்பட்டனர்.

காவல் துறையினர் மேற்கண்ட செய்திகளை ஆராய்ந்தனர். அவை ஆதாரமற்றவை என்பது தெரிய வந்தது. என்றாலும் இந்த பொய்ச் செய்தி பலராலும் நம்பப்பட்டதுடன் ""எங்கள் பெண்களின் மானத்தை பங்கப்படுத்தியவர்களை நாங்கள் சும்மா விடப்போவதில்லை. பழிக்குப்பழி வாங்கப் போகிறோம்"" என்ற வீராவேசத்தையும் தோற்றுவித்தது. இந்த வீராவேசமானது வன்மமாக, வெறியாக வெளிப்பட்டது. குற்றச் செயல்களாக, தீய செயல்களாக வெடித்தது.

*குஜராத்திலிருந்து திரும்புகையில் மனத்தில் பீதியுடனே வெளியேறுகிறோம். ஏன் இந்த பயம்? விஸ்வ இந்து பரிசத் நம்மைப் பார்த்துவிட்டது, இனி நம்மை விட்டு வைக்காது, பிடித்து அடித்து வெட்டிவிடும், எரித்துவிடும் என்ற பயமா? இல்லை....... அல்லது விஸ்வ இந்து பரிசத் வாய்ப்புக் கிடைக்கும் போது திரும்பவும் குஜராத் முஸ்லிம்களை கொன்றுவிடுமோ என்ற அச்சமா? அதுவுமில்லை.....*

*மனித மனங்களில் இவ்வளவு வெறுப்பா? ஆதுவும் அத்தனை எளிதாக அவற்றால் வெறுக்கமுடிகிறதே, அதை நினைத்தால்தான் பயமாக இருக்கிறது. உயிருடன் ஆட்கள் கொளுத்தப்பட்டுள்ளனர் நெருப்பில் அந்த வதைபட்ட உடல் அல்லாட, இவர்கள் சுற்றி நின்று கும்மாளமிடுகின்றனர். கர்ப்பிணிப் பெண்மணியின் வயிற்றிலிருந்து சிசுவொன்று வெளியே தூக்கியெறியப்படுகிறது. எரிக்கப்படுகிறது. உயிரோடு உள்ளவர்களின் மீதுதான் இத்தகைய வன்மம் காட்டப்படுகிறது என்று நினைத்து விடாதீர்கள். புழைய சமாதி ஒன்றினைத் தோண்டிப் போடுகின்றனர். என்றோ மாய்ந்துவிட்ட முஸ்லிம் ஒருவரின் எச்சங்கள் மீது பெட்ரோல் ஊற்றப்படுகிறது. சமாதி எரிகிறது. முஸ்லிம்களோடு சம்பந்தப்பட்ட எல்லாவற்றையும் இந்துக்கள் - சாதாரண இந்துக்கள் - வெறுக்கின்றனர். இன்று குஜராத்தில் இந்த வெறுப்பு மட்டுமே உயிர் வாழ்கிறது. சங் பரிவாரத்தைச் சேர்ந்தவர்களை விட்டுவிடுங்கள் - அவர்களை மனிதர்களுடன் சேர்க்க முடியாது அலுவலக எழுத்தர், குடும்பத்தலைவி, டாக்சி ஓட்டுநர், கல்லூரி மாணவன் - இவர்களுடன் பேசிப்பாருங்கள். வெறுப்பைக் கக்குவார்கள்.*

**(K.Balagopal, *Reflections On 'Gujarat Pradesh' in 'Hindu Rashtra'*, Economic and Political Weekly, June 1, 2002.)**

ஏதோ ஒரு பத்திரிக்கை சொன்னதை வைத்துக் கொண்டு இவர்கள் ஏன் இந்த ஆட்டம் ஆடினார்கள்? இந்தத் தவறான செய்தி போய் விழுந்து முளைவிட்டு பூதாகரமாக வளர்ந்த விளைநிலத்தைப் பற்றி நாம் புரிந்து கொள்ள வேண்டும். இந்தச் செய்தியைக் கேட்டு பொங்கிய மனம் இயல்பான, தன்னியல்பான உணர்ச்சிகளுக்கு மாத்திரம் ஆட்பட்ட மனமல்ல. அது குறிப்பிட்ட வகைகளில் கட்டமைக்கப்பட்ட மனம்.

குஜராத்தின் மூலைமுடுக்குகளிலும் கூட காணப்படும் ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் பயிற்சிக் கூடங்களில் பக்குவப்படுத்தப்பட்ட மனம். இப்பயிற்சிக்கூடங்கள் இந்து அடையாளத்தின், இந்து வரலாற்றின் “அருமைபெருமைகளை”ப் பறைசாற்றுவதுடன் தமது பணிகளை நிறுத்திக்கொள்வதில்லை. இந்து சமுதாயமும் இந்து தேசமும் காலங்காலமாக அடிமைப்படுத்தப்பட்டுள்ளன என்றும், அவ்வாறு அவற்றை அடிமைப்படுத்திய மூர்க்கர்களில் தலையாயவர்கள் முஸ்லிம்கள் என்றும், அவர்கள் வரலாறுநெடுக இந்து சமுதாய ஆளுமையை, அடையாளத்தைச் சிதைக்கும் வண்ணமாக இந்துப் பெண்களைப் பலாத்காரம் செய்து வந்துள்ளனர் என்றும், இந்து மகாராணிகளையும்கூட அவர்கள் விட்டு வைக்கவில்லை என்றும் பயிற்சிக்கூடங்களில் பாடம் புகட்டப்படுகிறது. மேலும், இந்துப் பெண்களை “காமவெறியுடன்“ இச்சிக்கும் முஸ்லிம் ஆண்களுக்குள்ள வீரியம், ஆண்மை, “கட்டுக்கடங்காத“ பாலியல் வெறி ஆகியன பற்றிய கட்டுக் கதைகள் திரும்பத்திரும்பச் சொல்லித் தரப்படுகின்றன. இந்துப் பெண்களை வசியம் செய்யும் திறனுடையவர்களாகவும் முஸ்லிம்கள் சித்திரிக்கப்படுகின்றனர். இது போன்ற கட்டுக் கதைகளைக் கேட்டு வளரும் சராசரி இந்து இளைஞனின் மனம் எப்படியிருக்கும், எத்தகைய வக்கிரங்கள் அம்மனத்தில் குடியிருக்கும் என்பதை நாம் சொல்ல வேண்டியதில்லை. முஸ்லிம் ஆண்களின் வீரியத்தைக் குறைக்க, முடக்க வேண்டுமானால் முஸ்லிம் பெண்களைப் பாலியல் பலாத்காரம் செய்வதுதான் தார்மீகக் கடமையாகும் என்று சராசரி இந்து இளைஞன் எண்ணும் அளவுக்கு அவனது உணர்வுகள் வக்கரித்துப் போயுள்ளன.

கோத்ரா சம்பவத்தைத் தொடர்ந்து நடந்த கொடூரங்கள் மேற்கூறிய உளவியலின் விளைவுகள்தான் என்றாலும், அக்கொடூரங்கள் தங்குதடையின்றி நடைபெற்றதற்குக் காரணம் குஜராத் அரசும் அரசு நிறுவனங்களும் இந்து வெறியர்களுக்கு அரண்களாக நின்று செயல்பட்டதுதான். குஜராத் நிகழ்வுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் அனைத்துமே இதைத்தான் சுட்டிக்காட்டியுள்ளன. மேலும், நடந்த ஒவ்வொரு நிகழ்வும் திட்டமிட்டுச் செயல்படுத்தப்பட்டதையும் இந்த ஆய்வுகள் எடுத்துக்காட்டியுள்ளன.

**அடுத்த தலைமுறை: இனப்படுகொலையின் நிழலில்**

***……எங்களால் தொடர்ந்து குழந்தைகளுடன் பேச முடியவில்லை. சில குழந்தைகள் திடீரென்று பெரியவர்களாகிவிட்டிருந்தனர் - தாம் காண நேர்ந்த கொடுமைகளைப் பிறருக்கு எடுத்துச் சொல்ல வேண்டியதன் அவசியத்தை உணர்த்துபவர்களாய் இருந்தனர். ஆனால் சலனமின்றிப் பேசிக் கொண்டிருக்கும் குழந்தைகள்கூட, அவர்களது அம்மா, அத்தை முதலியோர் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டதை விவரிக்கையில் முகத்தைக் கைகளில் புதைத்துக்***

*கொண்டு விடுவர். சில குழந்தைகள் தங்களது செல்லப் பூனைகள் கொல்லப்பட்டதை நினைத்துக் கதறினர். பக்கத்து வீட்டுக்காரர் கொன்று போட்ட எருமைமாட்டை நினைத்து ஓலமிட்டனர். நாங்கள் போய்ப் பார்த்த ஒவ்வொரு அகதி முகாமிலும் ஒன்றிரண்டு குழந்தைகள் தலையைக் கவிழ்த்துக் கொண்டு உடல் சரிந்து காணப்பட்டனர். இக்குழந்தைகளுடன் நாங்கள் நேரடியாகப் பேசவில்லை. இக்குழந்தைகள், எஞ்சியிருக்கும் அம்மா அல்லது அப்பா, தாத்தா, பாட்டி ஆகிய யாரோ ஒருவரின் பெயரை மட்டும் சொல்லிவிட்டு மௌனமாகி விடுவார்கள். அவர்களுடன் இருந்த பெரியவர்களிடம் பேசி அக்குழந்தைகளைப் பற்றி அறிந்து கொண்டோம். கோபமான, பீதியடைந்துள்ள குழந்தைகளையும் பார்த்தோம். முகாம்களில் சுமார் 50,000 குழந்தைகள் உள்ளனர். மனக்காயங்களுடன், உளவியல் பாதிப்புகளுடன்....*

(Kavita Panjabi, Krishna Bandopadyay and Bolan Gangopadhyay, ***The Next Generation: In The Wake Of Genocide)***

குஜராத்தின் இந்து சமுதாயமும் அம்மாநில அரசும் இணைந்து முஸ்லிம் சமுதாயத்தை அழிக்க நினைத்த வரலாற்றினை ஆராயும்முன், அந்த வரலாற்றின் முக்கிய குறியீடாக விளங்கும் பாலியல் வன்மம், வெறி முதலியவற்றையும் அவை தம்மை இனங்காட்டிக்கொண்ட விதங்களையும் நாம் ஆராய வேண்டியுள்ளது.

மார்ச் 2002 ஆம் மாதத்தை குஜராத்திலுள்ள முஸ்லிம் பெண்கள் எளிதில் மறக்கமாட்டார்கள். அவர்களும் அவர்களது குழந்தைகளும் நரகத்திற்கு இட்டுச் செல்லப்பட்டதுடன், அங்கேயே இருக்கச் சபிக்கப் பட்டுவிட்டனர்.

குஜராத்தில் 1969 முதல் தொடர்ந்து மதக்கலவரங்கள் நடந்து வந்துள்ளன. அக்கலவரங்களிலும் முஸ்லிம் பெண்கள் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டனர். 1992-93 இல் சூரத் நகரத்தில் பல முஸ்லிம் பெண்கள் பொது இடங்களில் நிர்வாணமாக்கப்பட்டுப் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டதையும், பின்பு எரிக்கப்பட்டதையும் பல உண்மை அறியும் குழுக்கள் கண்டறிந்து அச்சம்பவங்கள் குறித்த அறிக்கைகளை வெளியிடவும் செய்தன. ஆனால் அன்று முஸ்லிம் பெண்கள் மிகவும் தயக்கத்துடனேயே அவை குறித்துப் பேசினர், புகார் செய்தனர். அத்தகைய நிகழ்வுகள் அசாதாரணமானவை என்று நல்லெண்ணம் படைத்த இந்துக்கள் பலர் அன்று வாதாடினர். ஆனால் இன்று முஸ்லிம் பெண்கள் தங்களுக்கு நேர்ந்த கொடுமையைப் பற்றி மனந் திறந்து, தயக்கமின்றிப் பேச முன்வந்துள்ளனர். அவர்களைச் சிதைக்க முயன்றவர்களும் தாங்கள் செய்த கொடுமைகளை வீரதீரச்செயல்கள் என தம்பட்டமடித்துக் கொள்கின்றனர். இதற்குக் காரணம், இந்நிகழ்வுகள் யாராலும்

மூடிமறைக்க இயலாத அளவுக்குப் பரவலாக, பகிரங்கமாக நிகழ்ந்துள்ளன என்பதுதான். மேலும், இக்கொடுமைகளை இழைத்தவர்கள் தங்களை யாரும் ஒன்றும் செய்துவிட முடியாது என்ற இறுமாப்பில் இன்னும் சுற்றித் திரிகின்றனர். பாதிக்கப்பட்டவர்களின் தாங்கமுடியாத துயரம் ஒருபுறம் வன்செயல்புரிந்தவர்களின் அறம் மறந்த, மனிதம் இழந்த அலட்சியம் மறுபுறம் - உண்மை வெளிவருவதற்கு இரண்டுமே தத்தம் வகைகளில் காரணமாகவுள்ளன.

குஜராத்தில் எண்ணற்ற பெண்கள் கொல்லப்பட்டுள்ளனர். மார்ச் 6 அன்று அகமதாபாத் நகரிலுள்ள நரோதாபட்டியா என்ற இடத்திற்கருகே 96 சடலங்கள் கண்டெடுக்கப்பட்டன. அவற்றில் 46 பெண்களின் சடலங்கள். இந்தப் பெண்கள் இறப்பதற்கு முன் பட்ட அவதியை எடுத்துச் சொல்ல சொற்கள் போதாது. வார்த்தைகளைக் கடந்த ஒரு துயரத்தினால் மட்டுமே இந்த அவதியை உணர்த்த முடியும். அத்தகைய துயரத்தைத் தாங்கிக்கொண்டு உயிர் வாழ்ந்து கொண்டிருக்கும் குழந்தைகளின் சாட்சியத்திலிருந்து சில பகுதிகளை இங்கு தருகிறோம். இக்குழந்தைகளுடன் பேசிய பெரியவர்கள் அந்தப் பால்வடியும் முகங்கள் வெளிப்படுத்திய சோகத்தைத் தாங்க முடியாது அந்த இடத்திலேயே அழுதுவிட்டனர் என்று ஒரு உண்மை அறியும் குழுவின் அறிக்கை குறிப்பிட்டுள்ளது.

## குழந்தைகளின் சாட்சியங்கள்

<u>சதாம் ஹுஸைன் :</u>
<u>8 வயது. ரனாதிக்பூர் கிராமம், பஞ்சமகல்ஸ் மாவட்டம்</u>

8 வயது சதாம் ஹுஸைனின் முகத்தில் எப்போதும் ஒரு வெகுளித்தனமான சிரிப்பு. ஆனால் இது சாதாரண சிரிப்பல்ல - அச்சிறுவனின் முகத்துடன் ஒட்டிக்கொண்டுவிட்ட சிரிப்பு. தன்னை இந்த நிலைக்கு ஆளாக்கிவிட்ட உலகத்தினை எதிர்கொள்ள அவனது முகம் கண்டுபிடித்துள்ள முகமூடி. சதாமின் உடம்பில் ஆங்காங்கே தேமல் - அவனது பாதிக்கப்பட்ட மனத்தின் பதிவுகள். அவன் இருக்கும் அகதிமுகாமில் பணிபுரியும் லத்தி.ஃ.பா பென் கூறுகிறார்: ““அவன் வாய்பேசாமல் உட்கார்ந்திருப்பான். அவனது சகோதரர்கள் சாப்பிடக் கொடுத்தால் பேசுவான் ““. மோசின் (12 வயது), யாக்கூப் (10 வயது) அவனருகே எப்போதும் உள்ளனர். லத்தி.ஃ.பா பென் அவனுக்கு வைட்டமின் மாத்திரை கொடுத்தவுடன் சதாம் பேசினான்: ““என் அம்மா பெயர் அமினா பீபி. இவர்கள் எனது சகோதரர்கள். குண்டர்கள் கூட்டம் எங்கள்

கிராமத்துக்குள் நுழைந்தபோது இவர்கள் ஊரில் இல்லை. அம்மாவிடம் 60 ரூபாய் இருந்தது. 30 - 40 பேர் கொண்ட கும்பல் எங்களைத் தாக்கியபோது இந்தப் பணத்தை என் கையில் திணித்து என்னை ஓடிப்போகச் சொன்னாள் அம்மா. நான் ஓடினேன். ஆனால் முடியவில்லை. பெண்களை அவர்கள் இழுத்துச் செல்வதைப் பார்த்தேன்... மறைந்து கொண்டேன்.... (சதாமின் கண்கள் திடீரென்று எதையோ வெறித்துப் பார்க்கின்றன)... அப்புறம் அவர்கள் அம்மாவை நிர்வாணமாக்கினர்... (இதைச் சொல்லும்போது அவனது முகத்தில் ஒட்டிக் கொண்டிருந்த சிரிப்பானது இறுக்கமடைவதாய்த் தோன்றியது. பேசமுடியாமல் கண்களை மூடிக்கொண்டான். முகத்தைக் கைகளுக்குள் புதைத்துக் கொண்டான். பிறகு, தலையை நிமிர்த்தி மீண்டும் பேசத் தொடங்கினான்) இதை எங்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. ““போதும”“ என்றோம்.

அவனுடைய அம்மாவின் கதையை லத்தீ∴பா பென் விவரித்தார்: ““அவன் அம்மா மிகக் கொடூரமான வகையில் பலாத்காரம் செய்யப்பட்டதைப் பார்த்திருக்கிறான். அப்போது அவர்களது பக்கத்து வீட்டுக்காரர்களான பில்கீஸ்ஸூம் அவரது சகோதரியும் உடனிருந்தனர். அவர்கள் இருவரும் எப்படியோ தப்பி ஓடினார்கள். ஆனால் மூன்று நாட்களுக்குப் பிறகு அவர்களும் ஒரு வெறிக்கும்பலால் பலாத்காரம் செய்யப்பட்டனர். தனது அம்மா 3-4 நபர்களால் பாலியல் வன்முறைக்கு ஆளாக்கப்பட்டதையும் பிறகு அரிவாள், கத்தியால் தலைவேறு உடம்பு வேறாக வெட்டப்பட்டதையும் சதாம் பார்த்திருக்கிறான். அந்த வெறிக் கும்பல் போனவுடன் இவன் மீண்டும் ஓடத் தொடங்கினான். கையிலிருந்த பணத்தைக் கொண்டு கிடைத்ததை வாங்கித் தின்று கொண்டு மைல்கணக்காக நடந்து சென்று கடைசியில் காவல் நிலையம் ஒன்றை அடைந்திருக்கிறான். அங்கிருந்த போலீசார் இவனது தாய்மாமனை தேடிக் கண்டுபிடித்து அவரிடம் ஒப்படைத்தனர். அவர் இவனை இங்கு கூட்டி வந்தார். மோசினையும் யாக்கூபையும் இங்கு எப்படியோ சந்திக்க நேர்ந்தது... ““ **(சதாம் ஹுஸைன், லத்தீ∴பாபென், இக்பால் ஆரம்பப்பள்ளி முகாம், கோத்ரா, பேட்டி கண்ட நாள் மே, 6, 2002.)**

<u>ரேஷ்மா, எட்டு வயது, நரோதாபட்டியா, அஹமதாபாத்</u>

8 வயது ரேஷ்மா ஷா-எ-ஆலம் முகாமில் வசித்து வரும் சிறுமி. இவளது அழகிய கண்களில் ஒரு கேள்விக்குறி. இவளை ஏறிட்டுப் பார்க்கவே சங்கடமாக இருக்கிறது. ஆனால் கையைப் பிடித்துக் கொண்டு எங்களைத் தனது அம்மாவிடம்

அழைத்துச் செல்கிறாள். ரேஷ்மாவுக்கு அப்பா கிடையாது. இரண்டு நாட்களுக்கு முன் ஈகைத்திருநாளை கொண்டாடியதைப்பற்றி உற்சாகமாகப் பேசுகிறாள். அவள் கூறினாள்:

““வீட்டுக்கு வந்தவர்களுடன் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தோம். பிப்ரவரி 28 காலை “மாட்டடோர்“ வண்டிகளில், ஸ்கூட்டர்களில், கார்களில் பலர் இந்த குடியிருப்புக்கு வந்தனர். நிறையப்பேர், ஆயிரக்கணக்கானவர்கள் எங்களை அடிக்க ஆரம்பித்தனர், தாக்கினர். முதலில் குழந்தைகளை, இளைஞர்களை அடித்து நொறுக்கினர். அடிப்பதற்கென்று ஆயதங்களைக் கொண்டு வந்திருந்தனர். அப்புறம் கொல்லத் தொடங்கினர். நாங்கள் ஓடத் தொடங்கினோம். நான் ஒரு புதருக்குப் பின்னால் ஒளிந்து கொண்டேன்... அம்மாவும் ஓடினாள். மூச்சு இரைத்ததால் நின்றாள். அப்போது.... அப்புறம் என் மாமாவைக் கொன்றார்கள். என்னையும் அக்காவையும் பார்த்துவிட்டனர். அக்காவுக்கு கல்யாணம் நடக்கப் போகிறது, அவளை ஒன்றும் செய்யாதீர்கள் என்று பாட்டி அழுதார். பாட்டியைக் கத்தியால் குத்திக் கொன்றனர். பாட்டியின் சகோதரியை “ஜெய் ஸ்ரீராம் என்று சொல்“ என்று மிரட்டினர். அவர் மறுத்துவிட்டார். அப்போது அங்கு பல போலீஸ்காரர்கள் இருந்தார்கள். அவர்களிடம் சென்று கெஞ்சினோம். நாங்கள் எவ்வளவு கத்தியும் அவர்கள் கேட்கவில்லை. மௌனமாக அங்கு நடந்த சித்திரவதைகளைப் பார்த்துக் கொண்டு நின்றனர். பிறகு எங்களைப் பார்த்துச் சுட்டனர். நான் மறுபடியும் ஓடி ஒளிந்து கொண்டேன். என் அக்காவைச் சிலர் இழுத்து வந்தனர். கீழே தள்ளி பலவந்தமாக எதையோ செய்தனர்... நான் கத்த வாய் திறந்தேன். யாரோ என் வாயைப் பொத்தினார்கள். எங்கள் அக்கா, பாட்டி, பாட்டியின் சகோதரி எல்லோரையும் அவர்கள் எரித்ததைப் பார்த்தேன்....

நான் அந்த வீட்டுக்கு இனி போகவே மாட்டேன்... அக்கா அங்கு தூங்கிக் கொண்டிருக்கிறாள், அம்மாவும் நானும் வேறு எங்காவது போய் வாழ்வோம்... நான் நன்றாகப் படித்து அம்மாவைப் பார்த்துக் கொள்வேன்... ““. பேசி முடிக்கையில் ரேஷ்மாவின் கண்கள் களையிழந்து போகின்றன. **(ரேஷ்மா, ஷா-எ-ஆலம் முகாம், அகமதாபாத், பேட்டி கண்ட நாள் மே, 3, 10, 2002.)ழ**

இவை வெறும் எடுத்துக்காட்டுகள்தான். இப்படி இன்னும் எத்தனையோ சம்பவங்கள் :

- 13 வயது பர்சானாவின் வயிற்றுக்குள் ஒரு ஈட்டி செருகப்பட்டது. பிறகு அவள் எரிக்கப்பட்டாள்.

- கௌசர் பானு பலாத்காரம் செய்யப்பட்ட போது அவள் நிறைமாத கர்ப்பிணி. அவளது கர்ப்பப்பை கிழிக்கப்பட்டு குழந்தை கண்டந்துண்டமாக வெட்டப்பட்டது. பின்னர் அவளும் அக்குழந்தையும் எரிக்கப்பட்டனர்.
- ஃபத்தேபுரா பகுதியில் இளம்பெண்கள் நிர்வாணமாக்கப்பட்டு வீதிகளில் நடத்திச் செல்லப்பட்டனர்
- தண்ணீர் கேட்டு அழுத குழந்தைகளின் வாயில் பெட்ரோல் ஊற்றப்பட்டு அவை கொளுத்தப்பட்டன ஆசிப் என்ற 4 வயதுச் சிறுவன் பல நாள் வேதனைக்குப் பிறகு இறந்து போனான்.

பாதிக்கப்பட்ட குழந்தைகள், பெண்கள் பற்றிய விவரங்கள்,பேட்டிகள்ஆகியன கீழ்க்காணும் வெளியீடுகளிலிருந்து திரட்டப்பட்டுள்ளன: Kavita Punjabi and Others,***The Next Generation: In The Wake Of The Genocide - A Report On The Impact Of The Gujarat Pogrom ;*** Ruth Manorama and Others, ***Surviors Speak - How has the Gujarat Violence Affected Minority Women?***

*இரத்தக் காயங்களுடன் பல குழந்தைகள் அகதி முகாம்களுக்குச் எடுத்துச் செல்லப்பட்டனர். சிலர் உறவினர் வீடுகளுக்குச் சென்றனர். இரவோடு இரவாக முகாம்களை நாடி வந்த குழந்தைககளைப்பற்றி அகதி முகாமொன்றில் பணிபுரியும் மும்தாஜ் என்ற பெண்மணி கூறுகிறார் :*

*"ஒரு பதினோரு வயதுச் சிறுமி... இங்கு கொண்டு வருவதற்குள் இறந்து விட்டாள். முதல் வண்டி நடு இரவில் இங்கு வந்தது. அதற்குப்பிறகு நான்கு வண்டிகள்... வண்டிகளில் பெண்கள், இளம் பெண்கள், சிறுமிகள்... முதல் இரவில் 13 சிறுமிகள் வந்து சேர்ந்தனர்- அவர்களது பிறப்புறுப்புகளிலிருந்து இரத்தம் ஆறாக ஓடியது ... இரத்த ஓட்டத்தைத் தடுத்து நிறுத்த எதுவுமில்லை-காகிதத்திற்காக அலைஅலையென்று அலைந்தோம்... கிடைத்த காகிதங்களை கொண்டு இரத்தத்தைத் துடைத்தெடுக்க முயன்றோம். ...பல பெண்கள் வலிதாங்க முடியாமல் கதறினர்-அவர்களது பிறப்புறுப்புகளில் மரக்கட்டைகள் திணிக்கப்பட்டிருந்தன... 'என்னை முதலில் கவனியுங்கள்... இதை எப்படியாவது எடுத்து விடுங்கள்..' இப்படி இரவுநெடுக அலறல்கள்...*

*...பெண்கள் அமைப்பு ஒன்றினைச் சேர்ந்தவர்கள் வந்தனர்... மிக அருமையான பெண்மணிகள் -அவர்கள் மனநலமருத்துவர் ஒருவரை வரவழைத்து இச்சிறுமிகளுக்கு மருந்து கொடுக்க ஏற்பாடு செய்தனர்-'கைனகாலஜிஸ்ட்' ஒருவரையும் கூட்டி வந்தனர்... நாளுக்கு இரண்டு முறை ஒரு மருத்துவர் இப்போது முகாமிற்கு வந்து போகிறார்...*

*இச்சிறுமிகளின் மனநிலை மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது...சின்ன சத்தம் கேட்டால்கூட அலறியடித்துக் கொண்டு எழுகின்றனர். ...பலர் பேசுவதேயில்லை... ஒவ்வொரு இரவும் தங்களைப்போன்ற பெண்களும் குழந்தைகளும் கதறிக்கொண்டு வருவதைப் பார்க்கின்றனர்... எனக்கும் உடம்பு சரியில்லை. சாப்பிடமுடிவதில்லை. நான் சாப்பிட்டு 2*

| |
|---|
| ***நாட்கள் ஆகின்றன.***<br>(Kavita Punjabi and Others,<br>) |

குஜராத்தின் அகதி முகாம்களில் வாழும் குழந்தைகளுக்குப் பழக்கமான ஒரு சொல்: "பலாத்காரம்". ""பலாத்காரம் செய்வதென்றால் ஒரு பெண்ணை நிர்வாணமாக்கி எரிப்பதுதான்"" என்கிறார்கள். ஒரு குழந்தையால் மட்டுமே இப்படிச் சொல்லமுடியும்: நடந்ததை, ஒளிவு மறைவின்றி, சலனமின்றி விளக்கமுடியும். குஜராத் கொலைகளின் முழு வீச்சையும் உக்கிரத்தையும் வெளிப்படுத்தும் செயலாக, சொல்லாக, குறியீடாக இருப்பதுதான், "பாலியல் பலாத்காரம்" (Ruth Manorama and Others,***The Survivors Speak: How Has The Gujarat Massacre Affected Minority Women. -A Report by a Woman's Panel.***)

குழந்தைகளுக்குச் செய்யப்பட்ட தீங்குகளை எப்படிப் புரிந்து கொள்வது? விவரம் தெரியாத சிறார்களின்பால் எப்படி இத்தனை வெறுப்பைக் கொட்ட முடிந்தது?

ரஷ்ய நாவலாசிரியர் ∴பியோயோடோர் தோஸ்தோவ்ஸ்கியின் 'கரமஸோவ் சகோதரர்கள்' நாவலின் முக்கிய கதாபாத்திரமான இவான் கரமஸோவ் இளம் சிறார்களும் குழந்தைகளும் துன்புறுத்தப்படுவதையும் துயரப்படுவதையும் காண சகிக்காதவனாய், கடவுளின் இருப்பையே மறுக்கிறான். குழந்தைகளைத் தவிக்கவிடும் கடவுளும் ஒரு கடவுளா என்று பொருமுகிறான். குஜராத்தில் குழந்தைகள் சித்திரவதை செய்யப்பட்டதைப் பார்க்கையில் இவான் கரமஸோவின் கேள்வியில் புதைந்துள்ள துயரம், வேதனை நமக்கு நன்கு புரிகிறது. கடவுள் நம்பிக்கை உள்ளவர்களாக ஆகட்டும், இல்லாதவர்களாக ஆகட்டும், இந்தச் சின்னஞ்சிறு உடல்களும் மனங்களும் புண்பட்டுள்ளதைக் காணும்போது, கண்டிப்பாக தமது இருப்பை, வாழ்வை வெறுக்கத் தள்ளப்படுவார்கள், மனிதத்தை சந்தேகிக்க வேண்டியவர்களாகி விடுவார்கள்.

குழந்தைகள் குறிப்பிட்ட வகைகளில் துன்புறுத்தப்பட்டதற்கு சங் பரிவார் செய்து வரும் கீழ்த்தரமான, ஆதாரமற்ற பிரச்சாரம்தான் என்று வரலாற்றறிஞர் தானிகா சர்க்கார் சுட்டிக்காட்டியுள்ளார். முஸ்லிம்கள் வதவதவென்று பிள்ளைகளைப் பெற்றுக் கொள்கிறார்கள் இவர்களை இப்படியே விட்டுவிட்டால் இந்துக்களைவிட அதிக எண்ணிக்கையிலானவர்களாக ஆகி விடுவார்கள் முஸ்லிம் பெண்களின் "வரம்பற்ற பிள்ளைபெறும் ஆற்றலைக்" கட்டுப்படுத்த ஒரே வழி அவர்களது குழந்தைகளை அழிப்பதுதான் மேலும், குழந்தைகள்தான் ஒரு சமுதாயத்தின் நம்பிக்கை நட்சத்திரங்கள்

அச்சமுதாயத்தின் வருங்காலத்தைப் படைக்கப் போகிறவர்கள் ˙ மூதாதையர்களின் கனவுகளை நிறைவேற்றப் போகிறவர்கள் எனவே ஒரு சமுதாயம் அடையாளம் தெரியாமல் அழிந்து போக வேண்டுமென்றால் அதன் கனவுகளைச் சுமந்து வளரும் சிறார்களே இல்லாமல் செய்துவிட வேண்டும் - இதுதான் சங் பரிவாரத்தின் தர்க்கம் அவர்கள் கடைபிடிக்கும் தர்மம். (Tanika Sarkar , **Economic And Political Weekly, July 13, 2002)**

குஜராத்தின் முஸ்லிம் குழந்தைகளின் எதிர்காலம் எப்படியிருக்கும்? பள்ளிக் கூடங்களுக்கு அவர்களால் இனி தைரியமாக போய் வர முடியுமா? அச்சமின்றி கடை, கண்ணிக்கும் போய்த் திரும்பி வர முடியுமா?

குழந்தைகள் பீதிக்காளாக்கப்பட்டுள்ளனர் - இது ஒரு புறம் மறுபுறமோ கடந்த சில ஆண்டுகளாகவே முஸ்லிம் சிறுவர்களின் கல்வியுரிமைகள் பல்வேறு வகைகளில் பாதிக்கப்பட்டுள்ளன. சிறுபான்மையினர் வசிக்கும் பகுதிகளில் உள்ள நகராட்சிப் பள்ளிக் கூடங்களில் - அஹமதாபாத் நகரத்தைப் பொறுத்தவரை - படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை கடந்த 2 ஆண்டுகளாகக் குறைந்து கொண்டே வந்துள்ளது. மேலும், இப்பள்ளிக்கூடங்களின் ஆசிரியர்களில் பாதிப்பேர் பெரும்பான்மை - அதாவது இந்து - சமுதாயத்தை சேர்ந்தவர்களாகவே உள்ளனர். பொதுவாக. எல்லாப் பள்ளிக் கூடங்களிலும் 90% -க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் இந்துக்களாகவே உள்ளனர். குறிப்பிட்ட சமயப் பாடங்களையே இவர்கள் சொல்லித் தருகின்றனர். இந்து சமய பாடங்கள் மட்டுமே போதிக்கப்படுகின்றன. எல்லாக் குழந்தைகளும் ஒரே மாதிரி ஆடையணிய வேண்டும் என்றும் பள்ளிக்கூட விதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. சிறுபான்மையினர் வசிக்கும் பகுதிகளிலுள்ள பள்ளிக்கூடங்களில் 2-3 ஆண்டுகளாக ஆரம்ப வகுப்புகள் மட்டுமே உள்ளன. 5, 6, 7 ஆம் வகுப்புகள் நீக்கப்பட்டுள்ளன. மேல்படிப்புப் படிக்க விரும்பும் பிள்ளைகள் பெரும்பான்மையனர் (இந்து) குடியிருப்புகள் உள்ள பகுதிகளுக்குதான் செல்ல வேண்டியிருக்கிறது. உருது மொழி ஆசிரியர்கள் எல்லாம் உருதுப் பள்ளிக்கூடங்களிலிருந்து குஜராத்திப் பள்ளிக்கூடங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். முஸ்லிம் மாணவர்களின் தன்னம்பிக்கையைக் குலைக்கவும், முஸ்லிம் சமுதாயத்தின் பண்பாட்டு, சமய அடையாளங்களை அழிக்கவுமே மேற்கூறிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. சிறுபான்மையின மக்கள் பெரும்பான்மையினரை அண்டித்தான் வாழ வேண்டும் என்பது குஜராத்திய சமுதாயத்தில் ஒரு எழுதப்படாத விதியாகிவிட்டது.

பிப்ரவரி 28ஆம் தேதிக்குப் பிறகு பல குழந்தைகள் பள்ளிக்கூடம் போகவில்லை. பல இடங்களில் பள்ளிக்கூடங்கள் அகதி முகாம்களாக மாறியுள்ளன. நிறைய நடுத்தரவர்க்க முஸ்லிம் குழந்தைகள் தங்கியுள்ள "ரங் அவதூத்" முகாமில் பணியாற்றிவரும் அ.்.ப்ரோஸ் கண்ணீர் மல்கக் கூறிய செய்திகள் :

""எங்கள் பிள்ளைகளுக்கு என்ன பாதுகாப்பு இருக்கிறது? பஜ்ரங் தள ஆட்கள் பள்ளிக்கூடங்களில் புகுந்து எல்லாவற்றையும் உடைத்துள்ளனர், பள்ளிக் காவலர்களை அடித்துள்ளனர். பள்ளிக்கூடங்களிலுள்ள சிறுபான்மை இனக் குழந்தைகளின் பெயர்ப் பட்டியலை பள்ளி முதல்வரிடம் ஒப்படைக்க வேண்டும் என்று மிரட்டியுள்ளனர். லிட்டில்.்.பிளவர், டான் பாஸ்கோ, டிரினிடி, ஜி.எல்.எஸ் போன்ற ஆங்கிலக் கல்விப் பள்ளிக் கூடங்களில் எல்லாம் இது நடந்திருக்கிறது... இரண்டு பள்ளிக்கூடங்கள் முஸ்லிம் பெற்றோர்களுக்கு அறிக்கை விடுத்துள்ளன: "உங்கள் குழந்தைகளை இங்கிருந்து அழைத்துச் சென்றுவிடுங்கள். அவர்களது பாதுகாப்பிற்கு நாங்கள் உத்திரவாதம் தர இயலாது...". கலவரங்கள் நடந்து ஓயவில்லை. அதற்குள் தேர்வுகாலம் வந்துவிட்டது... என் மகன் தேர்வு எழுதப் போனான். அவன் பத்திரமாகத் திரும்பி வரவேண்டும் என்ற பயம் எனக்கு் அவன் தந்தைக்கு, தாத்தாவுக்கு... அவனுக்கு ஏதும் நடந்துவிடக்கூடாது என்ற பயம்... என் பிள்ளையை இனி நான் எப்படி படிக்க வைக்கப் போகிறேனோ? எனக்கு ஒரே ஒரு மகன்தான்...

""அவனுக்கு தேசப்பற்று அதிகம். நான் அவனிடம் என்ன சொல்ல, "இந்தியர்கள்" தான் கலவரங்களைத் தொடங்கினார்கள், கொன்றார்கள் என்று நான் சொன்னால் அவன் நம்பவே மாட்டான் - "எதிரி" பாகிஸ்தான்தான் இத்தகைய செயல்களைச் செய்யும் என்று அவன் நினைத்துக் கொண்டிருக்கிறான்... நான் கடைசியில் அவனிடம் சொன்னபோது, அவனுக்கு அப்படியொரு கோபம்..."" ***(அ.்.ப்ரோஸ்பென், ரங்அவதூத் முகாம், ஜுஹுசுரா, அகமதாபாத்)***

- ***குஜராத் அரசுவெளியிட்டுள்ள சமூகவியல் (Social Studies) பாட நூல்களில் சொல்லப்படுபவை***
- ***புராதன இந்தியப் பண்பாடு இந்துப் பண்பாடாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது (5ஆம் வகுப்பு).***
- ***முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள், பாரசீகர்கள் "வெளிநாட்டவராக"க் குறிக்கப்பட்டுள்ளனர் (இது, 9 ஆம் வகுப்புப்பாடத்தில் "நாடு சந்தித்து வரும் பிரச்சனைகளும் அதற்கான தீர்வுகளும்" என்ற பகுதியில் இடம் பெற்றுள்ளது.***

- *காந்தியடிகளின் கொலையில் ஆர்.எஸ்.எஸ் சம்பந்தப்பட்டிருந்தது குறித்த செய்திகள் கிடையாது. (8 ஆம் வகுப்பு).*
- *சர்வாதிகாரியும் இனப்படுகொலைகளை மேற்கொண்டவனுமான அடால்.்.ப் இட்லர், "ஜெர்மானிய அரசுக்கு மாண்பையும் பெருமையையும்" சேர்த்தவனாக சித்திரிக்கப்பட்டுள்ளான். (10ஆம் வகுப்பு).*
- *நாஜிசம், பாசிசம் ஆகியவற்றின் மோசமான கொள்கைகள் விமர்சனமின்றித் தரப்பட்டுள்ளன (10 ஆம் வகுப்பு).*

குஜராத் வன்முறைகளால் பெண்கல்விக்கு ஏராளமான சேதாரங்கள் ஏற்பட்டுள்ளன. 10, 12 ஆம் வகுப்பு மாணவிகள் பலர் வெளியே செல்ல பயந்ததால் இறுதித் தேர்வை எழுதவேயில்லை. கல்விக் கனவுகள் நிரம்பியிருந்த பெண்கள் பலரை இந்த படுகொலைகள் நம்பிக்கையற்றவர்களாய் ஆக்கியுள்ளது. திருமணமாகி, குழந்தை பெற்றும் கல்லூரிக்குச் சென்று வந்த 21 வயது சுல்தானா கூறியவை:

""நான் ஆங்கிலப் பள்ளிக்கூடத்தில் படித்து வந்தேன்... பன்னிரண்டாம் வகுப்பை முடித்தவுடன் பி.எஸ்சி படிப்பு படிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அப்போதுதான் எனது திருமணம் நிச்சயமானது. நல்ல பிள்ளை, திருமணம் செய்து கொள், திருமணத்திற்குப் பிறகும் படிக்கலாம்... என்று அப்பா சொன்னார்... எனது புகுந்த வீட்டாரிடம் எனது அம்மா பேசி, நான் கல்லூரிக்குப் போக அவர்கள் அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அவர்களும் ஒப்புக் கொண்டனர். என் கணவரும் என் படிப்பை ஊக்குவித்தார்... ஆண், பெண் இருபாலாரும் படிக்கும் கல்லூரி அது. நான் தனியாகவே போவேன், வருவேன்... ஆனால் இனி என்னால் இப்படிச் செய்ய முடியுமா என்று தெரியவில்லை... திடீரென்று என் நெஞ்சை பயம் கவ்வியுள்ளது. என்னால் எளிதில் யாரையும் நம்பமுடியவில்லை. நான் எப்படித் தேர்வு எழுதப் போகிறேனோ? நாங்கள் வேறு எங்கு போவது?""

கலவரங்கள், கொலைகள் காரணமாக ஊரை விட்டு வெளியேறிச் செல்லும் குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளால் இனி தொடர்ந்து பள்ளிக்கூடம் செல்ல முடியுமா? குடும்பங்களை இழந்து அனாதைகளாக உள்ள சிறார்களின் எதிர்காலம்தான் என்ன? புதிய இடங்களுக்கு, ஊர்களுக்கு அவர்கள் செல்ல நேர்ந்தால் அவர்களை அங்குள்ள பகுதிகளில் உள்ள பள்ளிக்கூடங்களில் சேர்த்துக் கொள்வார்களா? அல்லது இசுலாமிய அறம் போதிக்கும் "மதராசா"க்களில் மட்டுமே இனி அவர்களுக்குக் கல்வி அளிக்கப்படுமா?

படுகொலைகளின் பாதிப்புகள் தொடர்ந்து குஜராத் மாநிலத்தை அலைக்கழித்துக் கொண்டிருக்கும் போதும், மரண வாடை வீசிக் கொண்டிருக்கும் சூழலிலும் பள்ளி இறுதி ஆண்டுத் தேர்வுகளும் கல்லூரித் தேர்வுகளும் நடைபெற்றன.

- *குஜராத் உயர்நிலைக் கல்வி வாரியம் ( ர்பைாநச ளுநஉழனெயசல டீழயசன ) தயாரித்த (12ஆம் வகுப்பிற்கான) "ஆங்கிலப்" பாடத்திற்கான கேள்வித்தாளில் கீழ்க்கண்ட கேள்விகள் அடங்கியிருந்தன:*
- *குறிப்பிட்ட வாக்கியத்தை மாற்றி எழுதச் சொல்லும் கேள்விக்கென தேர்ந்தெடுக்கப்பட்ட ஆங்கில வாக்கியம்: 'If you do not like people, kill them'. If' என்ற சொல்லை நீக்கிவிட்டு வாக்கியத்தை மாற்றியமைக்குமாறு கேள்வி அமைந்திருந்தது.*
- *பல வாக்கியங்களை இணைத்து ஒரே வாக்கியமாக எழுதுக என்ற கேள்விக்கென தரப்பட்ட வாக்கியங்கள்:*
    1. *There are two solutions, one of them is Nazi solution.*
    2. *If you do not like people, kill them, segregate them.*
    3. *Then strut up and down.*
    4. *Proclaim you are the salt of the earth.*
- *5, 6ஆம் வகுப்புகளுக்ககான கேள்வித் தாள்களில் இடம்பெற்றிருந்த கேள்வி: ""மியான்களுக்கும் (மியான்கள் என்றால் முஸ்லிம்கள்) மற்றவர்களுக்கும் உள்ள அடிப்படை வேறுபாடு என்ன?""*

## இந்துப் பெண்களும் குஜராத் கொலைகளும்

பெண்ணுரிமை ஆர்வலர்கள், பெண் விடுதலைச் சிந்தனையாளர்கள், செயல்பாட்டாளர்கள், மனித உரிமை அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் ஆகிய எல்லோருக்கும் அதிர்ச்சி தந்த ஒரு விஷயம், குஜராத்திய இந்துப் பெண்கள், குறிப்பாக நகர்வாழ் நடுத்தர வர்க்கப் பெண்கள், முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறையில் நேரடியாகவும் மறைமுகமாகவும் ஈடுபட்டதுதான். முஸ்லிம் குடியிருப்புகளின் மீது நடந்த கல்வீச்சு நிகழ்ச்சிகளில் இந்துப் பெண்கள் உற்சாகமாகப் பங்கேற்ற காட்சிகளை "ஸ்டார்" தொலைக்காட்சி படம் பிடித்திருந்தது. குஜராத் கொலைகளை ஆய்ந்தறியச் சென்ற பல உண்மை அறியும் குழுக்களும், முஸ்லிம்களின் வீடுகளை எரிப்பதற்காக இந்துப் பெண்கள் தங்களது வீட்டு காஸ் சிலிண்டர்களை வழங்கினார்கள் என்று குறிப்பிட்டுள்ளன. குஜராத் நிலவரத்தைக் கண்டறியச் சென்ற பெண்கள் அமைப்புகள், இந்துப் பெண்களைப் பேட்டி கண்ட போது அவர்கள் எந்தளவுக்கு சங் பரிவாரத்தின் வெறுப்பு

நிறைந்த பொய்களை உள்வாங்கியுள்ளனர் என்பதை உணர்ந்தனர். குஜராத் இந்துப் பெண்கள் உண்மையென உள்வாங்கிக்கொண்ட பொய்ப் பிரச்சாரங்கள்:

முஸ்லிம் ஆண்கள் வெறியர்கள்.

ஒவ்வொரு முஸ்லிம் வீட்டிலும் ஏராளமான ஆயுதங்கள் சேர்த்து வைக்கப்பட்டுள்ளன.

- முஸ்லிம்கள் பலதார மணம் செய்து கொள்ளும் கயவர்கள் (இந்து ஆண்களும் இதைச் செய்கின்றனர், முஸ்லிம் ஆண்களைக் காட்டிலும் பலதார மணம் செய்து கொண்டுள்ள இந்து ஆண்களின் எண்ணிக்கைதான் அதிகம் என்ற புள்ளி விவரங்களை எடுத்துக் காட்டினாலும் அவற்றை இப்பெண்கள் ஏற்றுக்கொள்வதில்லை).
- இந்துப் பெண்களைப் பாலியல் பலாத்காரம் செய்யவே ஒவ்வொரு முஸ்லிம் ஆணும் காத்திருக்கிறான்.
- இவை போன்ற பிரச்சாரங்கள் இந்துப் பெண்களின் ஆழ்மனத்தில் பதிந்துள்ளன. முஸ்லிம் பெண்களும் தங்களைப் போன்ற பெண்கள்தானே என்ற உணர்வோ, ஆணாதிக்கத்தின் பிரிக்கமுடியாத அம்சமாக பாலியல் வன்முறை விளங்குகிறது என்ற புரிதலோ இப்பெண்களிடம் இல்லை. சாதி, மத, வகுப்பு அடையாளங்கள் பெண்களின் உடல்களைச் சார்ந்தே விளக்கப்படுகின்றன் "கற்பு", சாதியின், மதத்தின் "தூய்மை" ஆகியனவற்றைத் தொடர்புபடுத்தி, பெண்ணின் உடலை அவளிடமிருந்து அந்நியப்படுத்தி தனது நலன்களுக்காகக் கூறு போடும் ஆணாதிக்கச் சிந்தனையின் வக்கிரமும் இவர்களுக்குப் புரியவில்லை. இந்துப் பெண்களின் மனம் எந்தளவுக்கு வெறுப்பிற்கு, முஸ்லிம் விரோத மனப்பான்மைக்கு அடிமைப்பட்டுப் போயுள்ளது என்பதை கீழ்க்கண்ட விவரங்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்:

மாயா கொட்னானி பா.ஜ.க. சட்டமன்ற உறுப்பினர். 96 பேர்களின் சடலங்கள் தோண்டியெடுக்கப்பட்ட நரோதா பட்டியா பகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர். அந்தப் பகுதியில் நடந்த கொலைகளிலும் கலவரங்களிலும் இவரும் சம்பந்தப்பட்டிருப்பதாகப் பலரும் கூறியுள்ளனர். இச்சம்பவங்கள் தொடர்பாக பதிவு செய்யப்பட்டுள்ள முதல் தகவல் அறிக்கையில் (குஜசு) இவரது பெயர் இடம் பெற்றுள்ளது.

இவரை உண்மை அறியும் குழுவொன்று சந்தித்துப் பேசிய போது அவர் கூறியதாவது:

- இந்துக்களின் ஆத்திரத்தையும் ஆக்ரோஷத்தையும் நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.
- எங்களால் - குஜராத் அரசால் - கலவரத்தைத் தடுத்து நிறுத்த எதையும் செய்ய முடியவில்லை. ஏனெனில் இது மக்களின் இயல்பான கோபத்தின் வெளிப்பாடு.
- கோத்ரா சம்பவத்திற்கான பதிலடி இது. என்றைக்காவது ஒரு நாள் (முஸ்லிம்) பயங்கரவாதத்திற்கு எதிராக நாங்கள் எழத்தானே வேண்டும்.
- குஜராத்தில் இத்தகைய கலவரங்கள் ஏற்படுவது இயல்பு. ஏன், இந்த மாநிலத்திற்குரிய செயலாக, அதன் இயல்பை வெளிப்படுவதாக வகுப்புப் கலவரங்கள் அமைந்துவிட்டன.
- முஸ்லிம் பெண்களுக்கு நேர்ந்த பாலியல் வன்முறைகள் குறித்துப் பத்திரிக்கைகளில் செய்திகள் வந்துள்ளபோதிலும் அவற்றைப் பற்றி எனக்கு எதுவும் சரிவரத் தெரியாது. முஸ்லிம் பெண்களுடன் நான் பேசவில்லை. எங்கோ ஒரு பெண் பலாத்காரம் செய்யப்பட்டதாக போலீஸ்காரனொருவன் சொன்னான்.
- நடந்த சம்பவங்கள் முன்கூட்டியே திட்டமிட்டுச் செயல்படுத்தப்பட்டவை அல்ல. மக்களின் தன்னியல்பான கோபம்தான் கலவரமாக வெடித்தது.

பெண்கள் ஒற்றுமை, தோழமை குறித்துப் பலவாறு பேசியும் கனவுகண்டும் செயல்பட்டு வந்துள்ள பெண் விடுதலையாளர்களின் பெண்ணியச் சிந்தனைக்கு குஜராத் நிகழ்வுகள் பெரும் சவாலாக அமைந்துள்ளன. இந்துப் பெண்களின் அறியாமையை சங் பரிவாரம் தனது வெறுப்பு அரசியலுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டுள்ளது என்பது உண்மைதான் என்றாலும், நடுத்தரவர்க்கத்தைச் சேர்ந்த உயர்சாதிப் பெண்களிடத்திலும் சாதி ஆணவமும் சமயக் காழ்ப்புணர்வுகளும் இருக்கவே செய்கின்றன என்ற கசப்பான உண்மையை நாம் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். ஒரு பெண், தான் பெண்ணாக இருப்பதால் மட்டுமே பிற பெண்களுடன் நிபந்தனையற்ற தோழமை பாராட்டுவாள் என்று எண்ணுவதற்கில்லை. ஆண்களைப் போலவே பெண்களும் சாதி, சமய அடையாளங்களை உற்சாகத்துடன் ஏற்றுக் கொள்வதை கொடியங்குளம் முதல் காஷ்மீரம் வரை நம்மால் காண முடிகிறது. ஆணாதிக்கச் சிந்தனை, தந்தைமைச் சமுதாயம் patriarchal society) ஆகியவற்றின் அடிப்படைகளை சாதி வேறுபாடுகளும்

சமயவுணர்வுகளும் இணைந்து தீர்மானிப்பதால் பெண்ணியப் போராட்ட்ங்கள் சாதி எதிர்ப்புப் போராட்டங்களாகவும் வெறுப்பையும் பகைமையையும் வளர்க்கும் சமய நெறிகளுக்கு எதிரான போராட்டங்களாகவும் வளர வேண்டிய தேவையை இந்தக் காலகட்டம் நமக்கு உணர்த்தியுள்ளது.

இந்துப் பெண்களின் மனநிலைப்பாடு மேற்கூறிய வகைகளில் கட்டமைக்கப்பட்டுள்ளதைப் புரிந்துகொள்ளும் அதே வேளையில், இந்து ஆண்களின் மனநிலை குறிப்பிட்ட வகைகளில், வார்ப்புகளில் வடிவமைக்கப்பட்டுள்ளதையும் நாம் புரிந்துகொள்வது அவசியமாகிறது. கலவரங்களில் கலந்து கொண்டு கொள்ளை, கொலைகளில் ஈடுபட்ட இளைஞர்களில் பலர் ஆர்.எஸ்.எஸ். கருத்தியலின் “நியாய”த்தை ஏற்றுக் கொண்டவர்கள். அந்த “நியாய”மும் “தர்மமும்” இவர்களை ஈர்க்கக் காரணம், அவை ”ஆண்மை” க்குரிய அறங்களாக, ஆண்களின் ஆளுமையின் அத்தியாவசியமான பண்புகளாக கூறப்படுவதுதான். ““இந்து தேசத்தைக் காக்க வரும் இந்து மானத்தைப் பாதுகாக்க முன்வரும் பாரத மாதாவுக்கு ஏற்பட்டுள்ள களங்கங்களை போக்க வருக”” என்று ஆர்.எஸ்.எஸ். விடுக்கும் அறைகூவல் ஆண்களை, ””சரியான ஆண்பிள்ளைகளாக இருக்குமாறு”” உபதேசம் செய்கிறது. களையிழந்து காணப்படும் பாரதத்தாயை உய்விக்க அவளது திருமகன்கள் முறுக்கேறிய ஆண் சிங்கங்களாக மாற வேண்டும் என்று கோருகிறது. மேலும், இந்து ஆண்களின் ஆண்மையை நிலைநிறுத்த வேண்டுமானால், தாங்கள் யாருக்கும் சளைத்தவர்கள் அல்ல, தங்களாலும் பதிலடி தர இயலும் என்பதை அவர்கள் நிருபிக்க வேண்டும் என்றும் ஆர்.எஸ்.எஸ். கருத்தியல் நியதிகள் வலியுறுத்துகின்றன. காலங்காலமாக அந்நியர் ஆட்சிக்கு இந்து தேசம் கட்டுப்பட்டிருந்தது என்றும், இந்து தேசத்தின் அடிமைத் தளைகளை நீக்கவே இந்து ஆண்மை பேருருவம் எடுக்க வேண்டும் என்றும் சொல்லப்படுகிறது. குஜராத் படுகொலைகளில் ஈடுபடத் தயங்கிய ஆண்களுக்கு பஜ்ரங் தளம் கைவளையல்களைப் பரிசுகளாக அனுப்பி வைத்தது. ““ஏன் பெண் பிள்ளைகளைப் போல் இருக்கிறீர்கள்? எங்களுடன் இணைந்து முஸ்லிம்களைக் கொன்று போடாவிட்டால் உங்களது ஆண்மையை நாங்கள் சந்தேகிக்க வேண்டி வரும”” என்பதைத்தான் இந்த “வளையல் பரிசு” குறிப்பால் உணர்த்தியது.

தங்களது ”ஆண்மை”யை உறுதி செய்யவும், அதன் முழு ஆற்றலை வெளிப்படுத்தவுமே பலர் பலாத்காரச் செயல்களில், பாலியல் பலாத்காரங்களில் ஈடுபட்டனர். இந்த வகையில் “இந்துத்துவம்” ”இந்து உணர்வு” ஆகியன குறிப்பிட்ட

சாதி, வர்க்க நலன்களுக்கு அப்பாற்பட்டதாக ஆண்கள் அனைவரையும் தழுவும் மனோநிலையாகக் தன்னை இனங்காட்டிக் கொள்கிறது.

## குஜராத்திய சமுதாயமும் இந்துத்துவமும்

பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட வகுப்புகளை சேர்ந்தவர்கள்தான் குஜராத்தில் அதிக எண்ணிக்கையில் உள்ளனர். இவர்களில் பெரும் பகுதியினர், ஒழுங்கமைக்கப்படாத பணித்துறைகளில் வேலை பார்த்து வருகின்றனர். காந்தியம், சோசலிசம் என்பன போன்ற கருத்தியல்கள் சில தாக்கங்களை ஏற்படுத்தியுள்ள போதிலும், வலுவான, பரந்துபட்ட சாதி - எதிர்ப்பு இயக்கங்களோ, தலித் இயக்கங்களோ குஜராத்தில் வேரூன்றவில்லை. குஜராத்தின் பார்ப்பனரல்லாத உயர்சாதி இந்துக்களின் ஆதிக்கமும் - இவர்களில் கணிசமானவர்கள் “பனியா” வகுப்பினர் - பார்ப்பன இந்துமதக் கருத்தியலின் மேலாண்மையும் தொடர்ந்து பொது அறிவை வடிவமைத்து வந்துள்ளன. குறிப்பிட்ட பிற்படுத்தப்பட்ட வகுப்புகளை சேர்ந்த தலைவர்கள் தத்தம் சமுதாயங்களின் முன்னேற்றத்திற்காக சில சீர்திருத்தங்களை மேற்கொண்டுள்ள போதிலும், சாதி அமைப்பு முறையின் மேல் - கீழ் வரிசை நிலையை கேள்விக்குட்படுத்தியதாகத் தெரியவில்லை. உதாரணமாக, வடகுஜராத்திலும் மத்திய குஜராத்திலும் உள்ள “கோலிகள்” என்ற பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் தாங்கள் “சத்திரியர்”களாகக் கருதப்பட வேண்டும் என்ற கோரிக்கையை 20ஆம் நூற்றாண்டின் தொடக்க ஆண்டுகள் தொட்டே முன்வைத்து வந்துள்ளனர். தங்களது “சத்திரிய” தகுதியை நிலைநிறுத்தும் வகையில் பூணூல் அணியும் பழக்கத்தையும் மேற்கொண்டுள்ளனர். ராஜபுத்திரர்களின் வாழ்க்கை முறைகளைப் பின்பற்றி வந்துள்ளனர் (ராஜபுத்திரர்கள் தங்களை ”பிறவி” சத்திரியர்களாகக் கருதிகொள்பவர்கள்.) குஜராத்திய சத்திரிய மகாசபை அவர்களது வகுப்புணர்வை ஊக்குவித்து, அவர்களை உயர்சாதி இந்து”க்களாக அடையாளப்படுத்தியது. திரிசூலம், சுவஸ்திகா முதலிய இந்துச் சின்னங்களைத் தரித்துக் கொண்டு அவர்கள் தங்களை “உண்மை” இந்துக்களாக இனங்காட்டிக் கொண்டு வந்துள்ளனர். இவ்வாறு பல பிற்படுத்தப்பட்ட வகுப்புகள் தங்களை “சத்திரிய”ராக அடையாளப்படுத்திக் கொண்டு உயர்சாதித் தகுதியைக் கோரியுள்ளன. குஜராத் அரசியலிலும் அவர்களது பங்கு கணிசமானது. அவர்கள், பார்ப்பன இந்துக்களுக்கும் நிலவுடைமையாளர்களான “பட்டிதா”ர்களுக்கும் சவாலாக உள்ளனர் என்றாலும் உயர்சாதி அடையாத்தையும் இந்து உணர்வையும் அந்த ”சத்திரியர்கள்” வலியுறுத்தி வந்துள்ளனர்.

குஜராத்தில் தலித் இயக்கங்கள் வலுப்பெறாததற்கு காரணம், காந்தியத்தின் தாக்கம்தான். பாபா சாகேப் அம்பேத்கரின் சிந்தனைகள் இங்கே பெரியளவுக்குத் தாக்கம் ஏற்படுத்தவில்லை என்றுகூடச் சொல்லலாம். 1970களில் மகாராஷ்டிரத்தில் "தலித் சிறுத்தைகள்" அமைப்பு வளர்ந்த காலகட்டத்தில் குஜராத்திலும் அவர்களது போர்க்குணமிக்க அரசியலுக்கு ஓரளவு ஆதரவு கிடைத்தது. தலித் உரிமைகளுக்கான போராட்டங்களும், பிற ஒடுக்கப்பட்ட மக்களுடன் இணைந்த போராட்டங்களும் இக்காலகட்டத்தில் ஆங்காங்கே நடைபெற்றன. ஆனால் 1980களில் குஜராத்தில் வகுப்புரிமை (இட ஒதுக்கீடு) எதிர்ப்புக் கிளர்ச்சிகள் நடைபெற்ற சூழ்நிலையில் தலித் உரிமைப் போராட்டங்கள் முடக்கப்பட்டன. பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட இளைஞர்கள் பலர் இட ஒதுக்கீடு எதிர்ப்புக் கிளர்ச்சிகளுக்குப் பலியானார்கள். 1980களில் குஜராத்தில் காங்கிரஸ் ஆட்சி நடைபெற்று வந்தது. "சத்திரியர்கள்", முஸ்லிம்கள், தலித்துகள், ஆதிவாசிகள் ஆகியோரது அரசியல் அமைப்புகளையும் பிரதிநிதிகளையும் கூட்டுச் சேர்த்து கொண்டு காங்கிரஸ் ஆட்சிபுரிந்து வந்தது. ஆனால் அதே காலகட்டத்தில் வெடித்த இட ஒதுக்கீடு எதிர்ப்புக் கலவரங்கள் குஜராத்திய சமுதாயத்தின் மேல்சாதியினருக்குச் சாதகமாக அமைந்தன. ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் செல்வாக்கு இக்காலகட்டத்திலிருந்து மேலோங்கத் தொடங்கியது. அச் சூழ்நிலையில் தலித் மக்களின் உரிமைப் போராட்டங்கள் வளர்வதற்கான வாய்ப்புகள் குறைவானவையாகவே இருந்தன.

1980களில் தொடங்கிய ஆர்.எஸ்.எஸ். முதலான இந்து வெறி அமைப்புகளின் தாக்கம் குஜராத்தில் வளர்ந்து கொண்டே வந்துள்ளது. 1989 இல் அத்வானி தலைமையில் நடந்த ரத யாத்திரையும், பாபர் மசூதிப் பிரச்சனையும் இந்து உயர்சாதியினரின் ஆதரவைப் பெற்றன. குஜராத்திய "சத்திரிய"ர்களும் இந்துத்துவ சக்திகளுக்கு துணைபோகத் தயாராகினர். இந்தச் சூழ்நிலையில்தான் முஸ்லிம் - விரோதச் சிந்தனைகள் கொஞ்சம் கொஞ்சமாகக் குஜராத்திய சமுதாயத்தின் எல்லா மட்டங்களுக்கும் பரவத் தொடங்கின.

முஸ்லிம் விரோதச் சிந்தனைகள் குஜராத் மண்ணில் ஆழமாக வேரூன்ற வேறு சில சிறப்புக் காரணங்களும் இருந்தன. குஜராத் ஒரு "எல்லை" மாநிலம். பாகிஸ்தானின் எல்லைக்கோடுகளும் இந்திய எல்லைக்கோடுகளும் இம்மாநிலத்தின் தலைவிதியைத் தீர்மானிப்பதில் பெரும் பங்காற்றியுள்ளன. 1947 இல் ஏற்பட்ட நாட்டுப் பிரிவினையின் காரணமாக இந்து அகதிகள் பலர் குஜராத்தில் குடியேறினர். அவர்களிடம் முஸ்லிம் விரோத எதிர்ப்பு இருந்ததில் வியப்பில்லை. மேலும், குஜராத் இந்துக்கள்

தங்களை இந்திய தேசியத்தின் பாதுகாவலர்களாகவும் இந்திய இறையாண்மையைக் கட்டிக் காப்பவர்களாகவும் கருதி வந்துள்ளனர். ”பாகிஸ்தானின் விஷமத்தனமான அரசியலை” எதிர்க்கும் பொறுப்பு மற்ற இந்தியர்களைக் காட்டிலும் தமக்குக் கூடுதலாக இருப்பதாகக் கருதி வருகின்றனர். இந்தச் சூழ்நிலையில் குஜராத்தில் இந்து - முஸ்லிம் பூசல்கள் ஏற்படுவதும், அவை கலவரங்களாக வெடிப்பதும் தொடர்ந்து, ஆங்காங்கே, ஆனால் இதுநாள்வரை நகர்ப்புறங்களில் மட்டுமே, நடைபெற்று வந்துள்ளன. 1980களின் இறுதி ஆண்டுகளுக்கு பிறகே, அதுவும் பாபர் மசூதிப் பிரச்சனையும், ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் செல்வாக்கும் குஜராத்திய சமுதாயத்தின் பொது புத்தியை ஆட்கொள்ளத் தொடங்கிய பிறகே ஆழமான, வெறுப்பேறிய முஸ்லிம் - விரோதச் சிந்தனை பரவத் தொடங்கியது. சாதி எதிர்ப்புணர்வோ, சாதி எதிர்ப்பு அரசியலோ இம்மாநிலத்தில் பெரியளவுக்கு இல்லாததால் எல்லா இந்து சாதிகளும் இந்துத்துவச் சிந்தனைப் போக்கின் தாக்கத்திற்கு உட்பட்டன. இந்துத்துவ அரசியலின் சாதி அடிப்படைகளையும் இந்துத்துவ அமைப்புகளின் மேல்சாதித் தலைமையையும் கேள்விக்குட்படுத்தும் சாதி எதிர்ப்பு அமைப்புகள் இல்லாததால் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட வகுப்புகளின் பெரும்பகுதியினர் இந்துத்துவத் தத்துவங்களுக்கு இசைவளித்து வருவதை நாம் பார்க்கிறோம். ஆங்காங்கே சில தலித் தலைவர்களும் அமைப்புகளும் அண்மையில் நடைபெற்ற படுகொலைகளில் முஸ்லிம் மக்களுக்கு ஆதரவாக செயல்பட்டுள்ள போதிலும், ஒட்டுமொத்தமாகப் பார்க்கையில் இந்துத்துவ வெறியாட்டத்திற்கு ஈடுகொடுக்கவல்ல சாதி எதிர்ப்பு இயக்கங்கள் இல்லாததை நாம் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.

இது தொடர்பாக, 1960களில் பல போராட்டங்களில் ஈடுபட்டவரும் குஜராத்திய தலித் சிறுத்தைகள் தலைவருமான வல்ஜிபாய் படேல் கூறுவதைக் காண்போம் :

> ““இப்போதுள்ள தலைமுறையினரிடம் பல மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டன. அநீதி, வன்கொடுமை ஆகியவற்றுக்கு எதிராகப் போராட வேண்டியதை அவர்கள் மறந்து விட்டனர். நாம் நம்மை வலுப்படுத்திக் கொள்ள படிப்பு மிக அவசியம் என்று பாபா சாகேப் கூறினார். ஆனால் இன்று படிப்பின் மூலம் வேறு விளைவுகளே ஏற்பட்டுள்ளன. தலித்துகளில் சிலர் மிகச் சிறப்பாகப் படித்து முன்னேறியுள்ளனர். ஆனால் இவர்கள் ஊருக்கு உபதேசம் செய்யும் “நாற்காலி அறிவாளி”களாகி விட்டனர். இவர்களிடம் எதிர்ப்புணர்வும் தமது உரிமைகளை நிலைநிறுத்தத் துணியும் உறுதிப்பாடும் பெரியளவுக்கு இல்லை. அநீதிகளை எதிர்த்து இவர்கள்

உத்வேகமாகச் செயல்படுவதில்லை. சுரணை குன்றியவர்களாகி விட்டனர். தனக்கு நல்ல வேலை கிடைக்க வேண்டும், தான் மட்டும் முன்னேறினால் போதும் என்ற எண்ணமும், கொள்கைகளைக் கைவிடும் மனப்பான்மையும் சமரசம் செய்துகொள்ளும் மனப்பான்மையும் இவர்களிடம் அதிகமாக உள்ளன. தலித் அமைப்புகள் என்ற பெயரில் செயல்படும் குழுக்களில் பல, தனிப்பட்ட அரசியல் தலைவர்களின் நலன் சார்ந்தே இயங்குகின்றன.

## குஜராத்: இந்துத்துவச் செயல்பாடுகளின் நுட்பங்கள்

1. குஜராத்தில் உள்ள முஸ்லிம் சமுதாயம் ஒரேபடித்தானதல்ல. முஸ்லிம் மக்கள் பலர் தொழிலாளிகளாகவும் சிறு வியாபாரிகளாகவும் உள்ள போதிலும், தொழில்துறை அதிபர்களும் பெரிய வியாபாரிகளும் இச்சமுதாயத்தில் உண்டு. சமூகரீதியாகவும் முஸ்லிம் மக்கள் வேறுபட்டு உள்ளனர் - கச்சி மேமான்கள், கன்சிகள் என்று முஸ்லிம் மக்கள் மத்தியில் பல உட்பிரிவுகளுண்டு. எது எப்படியிருந்தாலும் குஜராத்திய முஸ்லிம் சமுதாயமானது அம்மாநிலத்தில் தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து வருகிறது. காலங்காலமாக குஜராத்தில் வாழ்ந்து வந்துள்ள முஸ்லிம் மக்களை "அன்னியர்களாகவும்" தேச விரோதிகளாகவும் இந்துத்துவ சக்திகள் அடையாளப்படுத்துவதற்கான அடிப்படையோ ஆதாரங்களோ இல்லாத போதிலும், கலவரங்கள் வெடிக்கும் சமயங்களில் இம்மக்களை வேற்றாட்களாகப் பாவிக்கும் அளவுக்கு இந்துத்துவக் கருத்தியலானது குஜராத்திய சமுதாயத்தில் ஊடுருவியுள்ளது. இத்தனைக்கும் அன்றாட வாழ்விலும், பொருளாதாரப் பரிமாற்றங்களிலும் முஸ்லிம்களும் இந்துக்களும் ஒருவரை ஒருவர் சார்ந்து வாழ்கின்றனர், ஒருவரோடு ஒருவர் இணைந்தே செயல்படுகின்றனர். உதாரணமாக, பாலன்புரி என்ற ஊரைச் சேர்ந்த முஸ்லிம்களில் பலர் அஹமதாபாத் நகரத்திலும் பிற இடங்களிலும் சைவ உணவகங்களை நடத்தி வருகின்றனர். இவர்களது உணவு விடுதிகளில் பரிமாறப்படும் உணவு வகைகளுக்கான மூலப்பொருட்களை - பால், காய், கனிகள் போன்றவற்றை - இந்து மளிகைக் கடைக்காரர்களிடமிருந்தே வாங்கி வருகின்றனர். அஹமதாபாத்திலுள்ள "இத்தாலியன் பேக்கரி"யின் உரிமையாளர் ஒரு முஸ்லிம். ஆனால் அவரது பொருட்களை மொத்தமாக வாங்கி விற்போரில் பெரும்பான்மையினர் இந்துக்கள். நிலைமை

இப்படியிருக்க, இந்துக்கள் அனைவருமே எப்படி முஸ்லிம் எதிர்ப்பாளர்களாக மாறினார்கள்? தெரிந்தவர்கள், தெரியாதவர், ஏழை, பணக்காரர் என்ற வேறுபாடுகளைக் கடந்த ஒரு இந்து வெறியுணர்வு எப்படி உருவானது? இப்படுகொலைகளில் பழைய பகைமைகள் முன்னுக்கு தள்ளப்பட்டன, பழைய வஞ்சங்கள் தீர்க்கப்பட்டன என்று கொண்டாலும்கூட இந்தப் பொதுவான வெறியுணர்வின் ஈர்ப்பாற்றலைப் புரிந்து கொள்ள வேறு சில தடயங்களை நாம் தேடிச் செல்லத்தான் வேண்டியிருக்கிறது. ஏழை இந்துத் தொழிலாளர்கள் முஸ்லிம் முதலாளிகளை வெட்டினார்கள், ஆதிவாசி மக்கள் முஸ்லிம் கடன்காரர்களின் சொத்துக்களை சூரையாடினார்கள் என்பன போன்ற சம்பவங்கள் ஆங்காங்கே நடந்துள்ளபோதிலும், முக்கால்வாசிக்கும் மேற்பட்ட கொலைகளுக்கும் வன்கொடுமைகளுக்கு இந்து மதவெறியும் இந்துத்துவக் கருத்தியல் பொய்களும்தான் காரணம்.

2. குஜராத்தில் 1970களிலிருந்தே இந்துக்கள் அனைவரையும் ஒரே குடையின் கீழ் கொண்டு வரும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. சாதி வேறுபாடுகளையும் சடங்கு சம்பிரதாயங்களையும் கடந்த ஒரு இந்து ஒற்றுமையை நிறுவ பாரத சேவாசிரமம், இந்து மிலான் மந்திர் போன்ற அமைப்புகள் செயல்பட்டு வந்துள்ளன. இவ்வமைப்புகள் வறியவர்கள் மத்தியிலும் சேவைகள் செய்து வந்துள்ளன. ‘சூத்திர” சாதிகளை இழிவானவையாகக் கருதும் போக்கினை இவை விமர்சிக்கின்றன. ஆனால் சாதி அமைப்பை ஏற்றுக் கொண்டுள்ளன. சாதிக் காழ்ப்புணர்வுகளை ஒதுக்கி இந்துக்கள் அனைவரும் ஒற்றுமையாக கூட்டுறவுடன் செயல்பட வேண்டும் என்று இவ்வமைப்புகள் வலியுறுத்தி வந்துள்ளன. மேலும், மிக கடுமையாக உழைக்கும் சூத்திரர்களும் பஞ்சமர்களும்தான் இந்து சமுதாயத்தின் முதுகெலும்பாக உள்ளனர் என்றும், இவர்களது நலன்களையும் தேவைகளையும் மேல்சாதி இந்துக்கள் தொடர்ந்து புறக்கணித்து வந்ததால்தான் இவர்களில் பலர் மதம் மாற நேர்ந்தது என்றும், இவர்களது ஆற்றலை உதாசீனப்படுத்தியதாலேயே இந்து மதம் நலிவுற்றுப் போயுள்ளது என்றும் இந்த அமைப்புகளைச் சேர்ந்த சாமியார்கள் சிலர் கூறியுள்ளனர். விஸ்வ இந்து பரிசத்தின் தலைவரான கே.கே.சாஸ்திரியும் இதையே கூறிவருகிறார்: ””எல்லா இந்துக்களும் “விதர்மிக”ளை (வேற்று மதத்தவரை) எதிர்க்க ஒன்றிணைய வேண்டும் ' மேல்சாதி இந்துக்கள் சாதிப் பிரிவினைகளைப் பெரிதுபடுத்தக்கூடாது””. ஆர்.எஸ்.எஸ் அமைப்பின்

சித்தாந்திகளும் மேற்கூறிய வகையில்தான் “இந்து ஒற்றுமை” குறித்துப் பேசி வருகின்றனர்: ”பிராமணன் பிரம்மனின் வாயிலிருந்து பிறந்தான் என்பதால் அவன் உயர்ந்தவன் அல்ல, அந்த பகவானின் காலிலிருந்து பிறந்ததால் சூத்திரன் தாழ்ந்தவனுமல்ல. ஒரு உடம்பின் ஒவ்வொரு உறுப்பும் பிற உறுப்புகளுடன் ஒத்திசைந்து போவதில்லையா? சமுதாயமும் அவ்வாறு ஒத்திசைந்து வாழ்வதில்தான் அமைதியும், நலமும் உண்டாகும்””.

குஜராத்திய தலித் மக்கள் மத்தியில் பணிபுரிவதற்கென்று ஆர்.எஸ்.எஸ். “சமாஜிக் சமரஸ்த மஞ்ச்” (மக்கள் சமரச பேரவை) என்ற அமைப்பை உருவாக்கியுள்ளது. ““நாம் எல்லோரும் ஒன்றுதான். இங்கு தீண்டாமைக்கு இடமேது? இன்றுள்ளது ஒரே ஒரு வர்ணம்தான், ஒரே ஒரு சாதிதான்: அதுதான் இந்துசாதி”” என்று பிரச்சாரம் செய்யும் இந்த அமைப்பு பாபா சாகேப் அம்பேத்கரைப் போற்றுகிறது ““அவர் தர்மத்தையே கடைப்பிடித்தார். சமயத்தின் பெயரால் சமுதாயத்தைச் சுரண்டிய பார்ப்பனர்களை அவர் எதிர்த்தார். அவர் ஒரு சிறந்த தேசியவாதி. இசுலாத்தையோ கிறிஸ்துவத்தையோ தழுவாது இந்த மண்ணில் தோன்றிய பௌத்தத்தை நாடியதிலிருந்தே அவரது தேசப்பற்று தெரிகிறது”” என்று பிரச்சாரம் செய்கிறது. அண்மையில் மராத்திய தலித் ஒருவர் எழுதிய “சங் பரிவாரமும் நானும்” என்ற நூல் இந்த அமைப்பால் வெளியிடப்பட்டது. குஜராத்தியில் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ள இந்த நூலுக்கு குஜராத்தி ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் “சாதனா” இதழின் ஆசிரியரொருவர் முன்னுரை எழுதியுள்ளார். இந்த நூலாசிரியர் ஆர்.எஸ்.எஸ். , சாதிக்கு அப்பாற்பட்ட தேசிய அமைப்பு என்று கூறுகிறார்.

பிற்படுத்தப்பட்ட சாதியினரையும், தலித் மக்களையும் ஈர்க்கும் முயற்சிகளைப் போலவே ஆதிவாசி மக்களை ஈர்க்கும் முயற்சிகளையும் ஆர்.எஸ்.எஸ் மேற்கொண்டு வந்துள்ளது. ஏற்கனவே காந்தியக் கருத்தியலுக்கு ஆட்பட்டு, புலால் உண்ணாமை, மது அருந்தாமை போன்ற இந்து மத உயர்சாதி சம்பிரதாயங்களை ஏற்றுக் கொண்டுள்ள ஆதிவாசிகளில் சிலர் ஆர்.எஸ்.எஸ். பிரசாரத்திற்கு செவிமடுத்து வருகின்றனர்.

3. 1998 இல் தொடங்கி குஜராத்திய சிறுபான்மை மக்களுக்கு எதிரான செயல்பாடுகளை குஜராத் நிர்வாகத்துறை மேற்கொண்டுள்ளது.

சிறுபான்மையினர் பிள்ளைகள் படிக்கும் நகராட்சிப் பள்ளிகளின் எண்ணிக்கை குறைக்கப்பட்டு வந்துள்ளதை நாம் ஏற்கனவே பார்த்தோம். அரசாங்க அலுவலர்கள் ஆர்.எஸ்.எஸ் அமைப்பில் சேரக்கூடாது என்ற தடை ஜனவரி 2000 இல் நீக்கப்பட்டது. இத்தடை பிறகு மீண்டும் அமலுக்கு வந்த போதிலும் நிர்வாகத்துறைக்கும் ஆர்.எஸ்.எஸ். அமைப்புக்கும் இடையிலான தொடர்புகள் வேறு வகைகளில் உறுதி செய்யப்பட்டன: முதலமைச்சர் மோடி ஒரு முன்னாள் ஆர்.எஸ்.எஸ் பிரசாரகர் உள்துறை அமைச்சர் கோர்தன் சட.்.பியா ஒரு விஸ்வ இந்து பரிசத் தலைவர். ஆர்.எஸ்.எஸ். நடத்தும் பொது நிகழ்ச்சிகளுக்கு அரசு முழு ஒத்துழைப்பையும் பாதுகாப்பையும் வழங்கி வருகிறது. இலவச மின்சாரம், தண்ணீர், சில இடங்களில் நிலபுலன்கள் முதலியன இவ்வமைப்பிற்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. (மக்கள் உரிமை அமைப்புகள், சிறுபான்மை நல அமைப்புகள் ஆகியவற்றுக்கு இத்தகைய சலுகைகள் மறுக்கப்பட்டுள்ளன)

டிசம்பர் 1998 இல் தொடங்கி ஜனவரி 1999 வரை கிறிஸ்துவக் கோயில்களும் கிறிஸ்தவர்களின் வீடுகளும் கல்வி நிறுவனங்களும் தாக்கப்பட்டன. 40 தாக்குதல்கள் இக்காலகட்டத்தில் நடந்தன. இவற்றில் பல டாங்ஸ் மாவட்டத்தில் நடந்தன. 1999 இல் காவல்துறை இயக்குனர் அனுப்பிய இரண்டு சுற்றறிக்கைகள், மாவட்டக் காவல்துறை கண்காணிப்பாளர்கள் தத்தம் மாவட்டங்களில் வாழும் கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள் ஆகியோரின் எண்ணிக்கை, முகவரிகள் முதலான விவரங்களை சேகரித்து அவருக்கு அனுப்புமாறு அறிவுறுத்தின. 1998 இல் வெவ்வேறு மதங்களைச் சேர்ந்தவர்கள் திருமணம் செய்து கொள்வதைக் கண்காணிக்க ஆளும் கட்சியான பா.ஜ.க. ஒரு குழுவை அமைத்தது. இந்துப் பெண்களை முஸ்லிம் ஆண்கள் கடத்திக் கொண்டுபோய் வலுக்கட்டாயமாக மணம் புரிந்துகொள்கின்றனர் என்பன போன்ற வதந்திகள் குஜராத்திய நாளிதழ்களில் வெளியிடப்பட்டன. அதைத் தொடர்ந்து சில இடங்களில் கலவரங்களும் வெடித்தன. அதே ஆண்டில் அஹமதாபாத் நகரிலுள்ள கட்டிடக்கலைக் கல்விக் கூடத்தை விஸ்வ இந்து பரிசத், பஜ்ரங் தள அமைப்புகளைச் சேர்ந்த இளைஞர்கள் தாக்கினர். கையில் கிடைத்ததை உடைத்துப் போட்டனர், ஒரு மாணவனைக் குத்திப் போட்டனர். இச்செயல்களுக்கான காரணம்: ““இந்தக் கல்லூரியில் பெண்கள் ஜீன்ஸ் பாண்ட் போட்டுக் கொண்டு சுற்றுகிறார்கள், ஆண்களுடன் சரளமாக பேசிப் பழகுகிறார்கள்””.

1999 இல் கார்கில் போர் மூண்ட போது முஸ்லிம் விரோத வெறிக்கு தூபம் போட்டு வளர்த்து பல இடங்களில் இந்துத்துவ அமைப்புகள் கலவரங்களைத் தூண்டிவிட்டன. 2000 ஆம் ஆண்டு அஹமதாபாத்தில் முஸ்லிம்கள் வாழுமொரு பகுதியில் பா.ஜ.கவைச் சேர்ந்த நகராட்சி மன்ற உறுப்பினர்கள் சிலர் குண்டுகளை வீசினர் - முஸ்லிம்களை பயமுறுத்த, அவர்களை அங்கிருந்து துரத்தியடிக்க...

2000இல் அமர்நாத் யாத்திரிகள் லஷ்கர் - இ - தொய்பா அமைப்பால் தாக்கப்பட்டதன் பின்னணியில் ஆளுங்கட்சியான பா.ஜ.க. ஒரு மாநிலம் தழுவிய கடையடைப்பிற்குத் தனது ஆதரவைத் தந்தது. அந்தக் கடையடைப்பின் போதும் அதற்குப் பின்னும் முஸ்லிம் சொத்துக்கள் - கடைகள், வீடுகள் - எரிக்கப்பட்டன. தர்க்காவொன்று எரிக்கப்பட்டது. இது போன்ற சம்பவங்கள் அகமதாபாத்தில் மட்டுமின்றி சூரத், வதோதரா (பரோடா) ஆகிய இடங்களிலும் நடைபெற்றன. இந்த நிகழ்ச்சிகளுக்குப் பிறகு பல முஸ்லிம் குடும்பங்கள் இந்துக் குடியிருப்புத் பகுதிகளில் இருந்த தமது வீடுகளைக் காலி செய்து கொண்டு முஸ்லிம் மக்கள் அதிக எண்ணிக்கையிலுள்ள குடியிருப்புகளுக்கு குடி பெயர்ந்தனர்.

4. மேற்கூறியுள்ள விவரங்களின் பின்னணியில் அண்மையில் நடந்து முடிந்த குஜராத் படுகொலைகளை ஆராய்கையில், எந்தளவிற்கு அச்சமுதாயம் இந்துமத வெறிப்பேச்சுக்கும் வன்மத்துக்கும் உடன்பட்டுப் போயுள்ளது என்பது தெரிய வருகிறது. கூடவே வேறு சில நிகழ்வுகளும் அச்சமுதாயத்தின் மனசாட்சியை குழப்பவும், குலைக்கவும், அம்மக்களை வன்முறையை நாடவும் செய்தன.

- 1990களில் தொடங்கி இன்றுவரை அகமதாபாத் நகரத்தில் மாத்திரம் 50க்கும் மேற்பட்ட ஜவுளித் தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளன. ஏறக்குறைய ஒரு இலட்சம் தொழிலாளர்கள் இதனால் வேலையிழக்க நேரிட்டது. வேலையின்மை அல்லது பகுதிநேர வேலை மட்டுமே கிடைக்கும் நிலை, கடன் தொல்லைகள், எதிர்காலத்தைக் குறித்த பயங்கள், கவலைகள் ஆகியவற்றால் பீடிக்கப்பட்டுள்ள தொழிலாளர்களின்

வெறுப்பும் எரிச்சலும் வெகு எளிதாக முஸ்லிம்களுக்கு எதிராகத் திசை திருப்பப்பட்டுள்ளன.

- 1980களில் அமுலில் இருந்த “தடா” சட்டத்தை வெகு தீவிரமாகப் பயன்படுத்திய அரசாங்கங்களில் குஜராத் அரசும் ஒன்று. 1980களிலும் 1990களிலும் ஏராளமான முஸ்லிம்கள் இச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டனர். முஸ்லிம்கள் அனைவருமே குற்றவாளிகள், தேசத் துரோகிகள், பயங்கரவாதிகள் என்ற கருத்து மக்களிடையே வேரூன்றக் காரணங்களில் ஒன்று, இச்சட்டம் பயன்படுத்தப்பட்ட விதமாகும். கடந்த சில ஆண்டுகளாகவே தனது அதிகாரங்களைத் தவறாகப் பயன்படுத்தியும், மக்கள் உரிமைகளை மறுத்தும் குஜராத் அரசு செயல்பட்டு வந்துள்ளது என்பது கவனத்திற்குரியது. அந்தச் செயல்பாடுகளின் வளர்ச்சியையும் நீட்சியையும்தான் சென்ற மாதங்களில் நாம் கண்டோம். எல்லா விதங்களிலும் குஜராத் அரசு அம்மாநிலத்தில் நடந்த படுகொலைகளுக்குத் துணை நின்றதைப் பல சம்பவங்களும் விவரங்களும் நமக்கு உணர்த்துகின்றன.

படுகொலைகள் நடந்து பல மாதங்கள் ஆகியும் எவ்வளவு பேர்கள் இறந்துள்ளனர் என்பதை அரசாங்கத்தால் சொல்ல இயலவில்லை, அல்லது சொல்ல விரும்பவில்லை.

- கலவரங்களை விரைவில் கட்டுப்படுத்தி நிலைமைகளை ஓரளவுக்கு சமாளித்த நேர்மையான காவல்துறை அதிகாரிகளை குஜராத் அரசு உடனடியாக இட மாற்றம் செய்தது.

- சம்பவங்களில் பாதிக்கப்பட்டவர்கள் காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கைகளைத் தாக்கல் செய்வதற்கு முன்பே காவல்துறையினர் தாமே அத்தகைய அறிக்கைகளைத் தயாரித்து (ஜோடித்து) வைத்திருந்தனர். புதிய செய்திகளை அவ்வறிக்கைகளில் இணைக்க மறுத்தனர். பெட்ரோல் கேன்கள், கொலை, கொள்ளையில் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்கள் போன்ற முக்கியத் தடயங்களை கைப்பற்ற மறுத்தனர். இறந்து போனவர்களின் அடையாளங்களைக் கண்டறிந்து, புகார் கொடுக்கச் சென்றவர்களின் வாக்குமூலங்களைப் பதிவு செய்ய மறுத்தனர். பெட்ரோல் கேன்கள், கொலை கொள்ளையில் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்கள் போன்ற முக்கியத் தடயங்களைக் கைப்பற்ற மறுத்தனர்.

இறந்துபோனவர்களின் அடையாளங்களைக் கண்டறிந்து புகார் கொடுக்கச் சென்றவர்களின் வாக்கு மூலங்களைப் பதிவு செய்ய மறுத்தனர்.

- இந்துத்துவ அமைப்புகளைச் சேர்ந்த முக்கியத் தலைவர்களாக இருக்கட்டும், ஆளுங்கட்சிப் பிரமுகர்களாக இருக்கட்டும் - ஒருவர்கூட நடந்த நிகழ்ச்சிகளுக்கு வருத்தம் தெரிவிக்கவில்லை. மாறாக, பலர் இப்படுகொலைகளை நியாயப்படுத்தி வந்துள்ளனர்.

- காயப்பட்ட, உயிரோடு போராடி கொண்டிருந்த முஸ்லிம்களைக் கொண்டு சேர்த்தபோது சில அரசாங்க மருத்துவமனைகளில் அவர்களுக்கு சிகிச்சையளிக்க மருத்துவர்கள் மறுத்துள்ளனர்.

- முஸ்லிம்களின் பொறுப்பில் இருந்த அவசர சிகிச்சை ஊர்திகளை ( ஆம்புலன்ஸ்கள்) காவல்துறையினர் பல இடங்களில் தடுத்து நிறுத்தி சோதனையிட்டு அவர்களுக்குத் தொல்லைகளை ஏற்படுத்தியுள்ளனர்.

- அரசாங்க அதிகாரிகளின் உதவியுடனும் அரசு ஆவணங்களை வைத்துக் கொண்டும்தான் முஸ்லிம் குடியிருப்புகளும் கடைகளும் அடையாளம் கண்டறியப்பட்டு குறி வைத்துத் தாக்கப்பட்டுள்ளன. (இந்துக்களுக்குச் சொந்தமான, ஆனால் முஸ்லிம்கள் வாடகைக்கு எடுத்திருந்த கடைகள் எரிக்கப்படவில்லை. இதிலிருந்து எவ்வளவு கட்டுப்பாட்டோடும் கருத்துடனும் இந்துத்துவ அமைப்புகள் வேலை செய்துள்ளன என்பதும், அரசாங்க உதவியின்றி இத்தனை கச்சிதமாக அவர்களால் வேலையை முடித்திருக்க முடியாது என்பதும் நமக்குத் தெரிகிறது.)

- முஸ்லிம் தர்க்காக்கள் எரிக்கப்பட்டு, குடியிருப்புகள் அழிக்கப்பட்டு தூசியடங்குவதற்குள் அப்பகுதிகளில் அவசரம் அவசரமாக சாலைகள் அமைக்கப்பட்டன. மசூதிகளும் தர்க்காக்களும் இருந்த இடங்களில் தற்காலிக இந்துக் கோயில்கள் எழுப்பப்பட்டன.

- மத்திய, மாநில அரசுகளின் ஒத்துழைப்பின்றி பஜ்ரங் தள உறுப்பினர்களும் விஸ்வ இந்து பரிசத் ஆட்களும் கும்பல் கும்பலாக அலைந்து திரிந்து 16 மாவட்டங்களில் தமது கொடூரமான கைவரிசையைக் காட்டியிருக்க முடியாது.

- ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் அகதி முகாம்களில் இன்றும் வாழ்ந்து வருகின்றனர். அவர்களுக்குரிய உதவித் தொகையையோ, இழப்பீட்டுத் தொகையையோ, அவர்களுக்குத் தேவையான மருத்துவ உதவிகளோ, பாதுகாப்பினையோ குஜராத் அரசும் மத்திய அரசும் இன்றுவரை மனமுவந்தோ, தொடர்ச்சியாகவோ அளிக்கவில்லை. தன்னார்வக் குழுக்களும், கிறிஸ்துவத் தொண்டு நிறுவனங்களும், முஸ்லிம் சமுதாய அமைப்புகளும்தான் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி புரிந்து வந்துள்ளன.

## இந்துத்துவம் சாதிக்க நினைப்பதென்ன?

1939இல் ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் முக்கிய சித்தாந்திகளில் ஒருவரான எம்.எஸ்.கோல்வால்கர் “நாம் அல்லது நமது தேசத்துவம்” என்ற நூலை எழுதி வெளியிட்டார். அதில் அவர் திட்டவட்டமாகக் கூறினார்:

> இந்துஸ்தானத்திலுள்ள அந்நிய இனங்கள் யாவும், இந்துப் பண்பாடு, மொழி ஆகியவற்றை ஏற்றுக் கொள்ள வேண்டும், இந்து இனத்தின் பண்பாடு, பெருமை ஆகியவற்றை உயர்த்திப் பிடிப்பதைத் தவிர வேறு எதையும் நினைக்கக் கூடாது. அவை இந்து சமயத்தை மதிக்க வேண்டும், அதை வணக்கத்திற்குரியதாகக் கருத வேண்டும் ் அதாவது இவ் இனங்கள் தமது தனித்தன்மையை இழக்கவும் இந்து இனத்தோடு இணையவும் தயாராக இருக்க வேண்டும். இதைச் செய்யாவிட்டால் இவ் இனங்கள் இந்து இனத்துக்கு அடிபணிந்தும், தமக்கென எதையும் கோராமலும், எவ்வித தகுதிகளையும் தமக்கெனக் கேட்காமலும் இந்நாட்டில் வாழவேண்டி வரும். இவர்களுக்குரிய உரிமைகள், ஏன் குடியுரிமைகள் கூட இவர்களுக்கு வழங்கப்பட மாட்டாது.

இன்று குஜராத்தில் கோல்வால்கரின் தேசியம்தான் நடைமுறையில் உள்ளது. அங்கு இந்து வெறியாளர்கள் முஸ்லிம்களை அடித்து உதைத்து “ஜெய்ஸ்ரீராம்” என்று சொல் என்று மிரட்டும் போதும் ் பெங்க;ரில் நடந்த ஆர்.எஸ்.எஸ். கூட்டத்தில், இந்துக்களின் நல்லெண்ணத்தை அண்டியே முஸ்லிம்கள் வாழ வேண்டும் என்று ஆர்.எஸ்.எஸ். தலைவர் சுதர்சன் முழங்கிய போதும் ் கோவாவில் பிரதமர் வாஜ்பாயி முஸ்லிம்களை “எங்கு சென்றாலும் தொல்லை விளைவிக்கும் ஆட்கள்” என்று குறிப்பிட்ட போதும் முஸ்லிம்கள் தமது மதத்தைப் பின்பற்ற அனுமதிக்கும் அளவுக்கு இந்துக்களுக்கு தாராள குணமிருக்கிறது என்று அவர் பெருமை பேசிக் கொண்ட போதும்

கோல்வால்கரின் கொள்கைகள் இன்று உயிர்பெற்றுச் சிறப்பாகச் செயல்படுவதை நம்மால் காண முடிகிறது. இந்துத்துவக் குண்டர்கள் முஸ்லிம்கள் பயணம் செய்த டெம்போ வண்டிகளை கொளுத்தியதும் (லிம்பாடியா சௌக்கிரி என்ற இடத்தில் நடைபெற்றது), அவர்களை மின்சாரம் பாய்ச்சிக் கொன்றதும் (இது நடந்தது சர்தார்புராவில்), வயல்களில் கொலை செய்ததும் (பண்டர்வாடாவில்), தாயின் கருவிலிருந்து குழந்தையை வெளியே இழுத்துப்போட்டு எரித்ததும் (அகமதாபாத்தில்) கோல்வால்கரின் கொள்கையை மெய்ப்பிக்கத்தான். கோல்வால்கர் மேலும் கூறியதாவது:

> தனது இனத்தின், பண்பாட்டின் தூய்மையைப் பாதுகாக்க ஜெர்மனி தனது நாட்டிலிருந்த செமிடிக் இனத்தவரை (யூதர்களை) களைந்தெறிந்து உலகையே அதிர்ச்சியில் ஆழ்த்தியது. இனப்பெருமையின் உச்சக்கட்டத்தை இந்நாடு எட்டியுள்ளது. அடிப்படைகளிலேயே வேறுபட்டு உள்ள இனங்களும் பண்பாடுகளும் ஓர் ஒன்றுபட்ட முழுமைக்குள் அடங்கி வாழ முடியாது என்பதையே ஜெர்மனியின் செயல்பாடுகள் நமக்கு எடுத்துக் காட்டுகின்றன. நமக்கு இது ஒரு நல்ல பாடம்தான் - இதிலிருந்த நாம் கற்றுக் கொண்டு பயனடைய ஏராளமான விஷயங்கள் உள்ளன.

இந்துக்கள் அல்லாதவர்களை அடக்குவதும், அவர்களது தனித்தன்மைகளை மறுப்பதும், அவர்களுக்குக் குடியுரிமைகளை வழங்காமல் இருப்பதையுமே ஆர்.எஸ்.எஸ். தலைமையில் இயங்கும் இந்துத்துவ சக்திகள் விரும்புகின்றன. விஸ்வ இந்து பரிசத் குடியுரிமைகள் மறுக்கப்பட வேண்டியவர்களின் பட்டியலில் கம்யூனிஸ்டுகளையும் சேர்த்துள்ளது. இந்துத்துவச் சித்தாந்திகளில் மூத்தவரான சாவர்க்கரைப் பொறுத்தவரை இந்துக்களுக்கு மட்டுமே குடியுரிமைகள் பெறத் தகுதியுண்டு. அவர் எழுதிய வெறுப்பு தோய்ந்த வரலாற்று நூல்களில் முஸ்லிம்கள் இந்து சமயத்துக்கும் தேசத்துக்கும் ஊறு விளைவிப்பவராகவும் இந்துப் பெண்களை நாசமாக்க விரும்புபவர்களாகவும் சித்திரிக்கப்பட்டுள்ளனர். இவரது கொள்கைகளின்படி பழங்காலத்தில் எப்போதோ முஸ்லிம்கள் இந்துக்களுக்குச் செய்த கொடுமைகளுக்கு இக்காலத்து முஸ்லிம்களைப் பழிவாங்குவது சரியான, தர்மமான செயல் எந்தவொரு சூழலிலும் ஒரு இந்து ஒரு முஸ்லிமைப் பழிவாங்கத் தயங்கக் கூடாது... சாவர்க்கரின் கருத்தியலுக்கு ஏற்பவே ஆர்.எஸ்.எஸ். செயல்திட்டங்கள் அமைந்துள்ளன. வரலாற்று உண்மைகள் திட்டமிட்டுத் திரிக்கப்படுகின்றன. முஸ்லிம்களை எதிர்கொள்ள இந்து இளைஞர்களுக்கு உடற்பயிற்சியும் ஆயுதப்பயிற்சியும் வழங்கப்பட்டுள்ளன. ”இந்துப் பெருமை” பல்வேறு வழிகளில் போதிக்கப்படுகிறது - கதைகள், பாடல்கள் மூலம். இந்த

அமைப்பு பள்ளிக்கூடங்களை நடத்துகிறது, பண்பாட்டு அமைப்புகளை நிறுவியுள்ளது, சேவை மன்றங்களை ஏற்படுத்தியுள்ளது. தலித்துகள், ஆதிவாசிகள், ஏழைகள் ஆகியோரின் குடியிருப்புகளில் பணிபுரிகிறது. இவற்றைச் செய்துதான் சாதிகளும் குழுக்களும் நிறைந்துள்ள இந்து சமுதாயத்தை ஒன்று திரட்டப் பார்க்கிறது.

இந்த ஒன்றுதிரட்டுதல் என்பது முஸ்லிம்களை, கிறிஸ்தவர்களை அச்சுறுத்தத்தான். குறிப்பாக "முஸ்லிம் பயங்கரவாதம்" என்பதை எதிர்கொள்ளத்தான். இந்துத்துவம் முஸ்லிம்களை அழித்தாலும், எரித்தாலும் "முஸ்லிம் பயங்கரவாதம்" என்ற காரணம் எல்லாவித அராஜகச் செயல்களுக்குமான விளக்கமாக, தொடர்ந்து இத்தகைய செயல்கள் மேற்கொள்ளப்படுவதற்கான நியாயமாக அமைந்து வருகிறது. எல்லையற்ற, கொடுமைகளைச் செய்யவும் அவற்றினூடாக "இந்து தேசிய" உணர்வை உருவாக்கவும் இந்துத்துவ சக்திகளுக்கு வாய்த்துள்ள ஒரு முகாந்திரம் "முஸ்லிம் பயங்கரவாதம்" என்பதாகும். இதன் பெயரால் வரலாறு திரிக்கப்படுகிறது. படுகொலைகள் நியாயப்படுத்தப்படுகின்றன. வருங்கால வன்முறைக்கான முன்தயாரிப்பு வேலைகள் செய்யப்படுகின்றன.

## நமது நிலைப்பாடு

இது அறமல்ல, அரசியல் அல்ல, தேசப்பற்றல்ல. இது இனவாதம், இனப்படுகொலைக்கான அறைகூவல். பார்ப்பனிய இந்து மதத்தையும் வருண சாதி அமைப்பையும் கட்டிக் காக்கவும் நிலை நிறுத்தவும் பார்ப்பனியக் கருத்தியலுக்கு இசைவு பெறவும் மேற்கொள்ளப்படும் கயமை நிறைந்த செயல். வெறுப்பை வளர்க்கும் கொடுமை. இத்தகைய கயமையை, வெறுப்பை எதிர்கொள்ள பலதரப்பட்ட சனநாயக போராட்டங்கள் தேவை. வரலாற்றை மீட்டெடுத்து ஆராய, உழைக்கும் மக்களை ஒன்று திரட்ட, சாதியை எதிர்க்க, இந்துமத அடிப்படைவாதங்களை முறியடிக்க எனப் பல போராட்டங்கள் தேவை. தற்சமயம் உடனடியாக நாம் செய்ய வேண்டியவை:

- குஜராத்தில் நடந்த சம்பவங்களின் குரூரங்களை நாம் மறந்து விடக்கூடாது. இந்துத்துவம் பொய்க்கு பெயர்போனது, சூழ்ச்சி செய்வதில் திறன் வாய்ந்தது. பாதிக்கப்பட்ட முஸ்லிம்களின் நினைவுகளை, சாட்சியங்களை அவர்களுடன் நாமும் சேர்ந்து பாதுகாக்க வேண்டும். அவர்கள் தொடர்ந்து வாழ, வாழ்க்கையை எதிர்கொள்ள நம்மாலான உதவிகளைச் செய்ய வேண்டும்.

- பெண்கள் மட்டுமல்லாது ஆண்களும் பாலியல் வன்முறை, இனவெறுப்பு, தேசியம் இவற்றுக்கு இடையிலான உறவுகளைப் புரிந்துணர்ந்து பாலியல் வன்முறையின் உள்ளார்ந்த ஆணாதிக்க அரசியலை எதிர்க்க முன்வருவது அவசியம்.
- அரசு நிறுவனங்கள் சட்டத்தைத் தவறாகப் பயன்படுத்துபவதையும், வரம்பற்ற அதிகாரங்களை கையகப்படுத்துவதையும், தொடர்ந்து மனித உரிமைக் கோரிக்கைகளைப் புறக்கணிப்பதையும் எதிர்க்க வேண்டியதும், அரசின் உரிமை மீறல் செயல்பாடுகளைக் கண்டிப்பதும் முக்கியமாகிறது. இதை நாம் செய்யாவிட்டால் குஜராத் சம்பவங்கள் எங்கும், எந்நேரமும் நடக்கலாம்.
- இந்தியாவில் இனி இது போன்ற நிகழ்ச்சிகளுக்கான அறிகுறிகள் தென்படும் போதே அவற்றை எதிர்க்கத் துணிவதும், இந்த வெறித்தனத்துக்கு தீனிபோடும், உரமேற்றும் சாதிப் பெருமைப் பேச்சுகளையும் தலித் விரோதச் செயல்களையும் கண்டிப்பதும் எதிர்ப்பதும் அவசியமாகிறது.
- நமக்குத் தேவை “எல்லா மதமும் சம்மதமே” என்பது மட்டுமல்ல. நமக்குப் பிடிக்காத, நம்மிடமிருந்து வேறுபட்டு நிற்கும் கொள்கைகளுடன் வாழ்வு முறைகளுடன், சமயங்களுடன் வாழவும், ஆரோக்கியமான முறையில் அவற்றைக் குறித்த விவாதங்களை மேற்கொள்ளவும் நாம் பழக வேண்டியதும் முக்கியமான தேவையாகும்.
- வெறுப்பு மட்டுமே உயிர்வாழ வேண்டும் என்பது இந்துத்துவத்தின் விருப்பம். நமக்கோ மனித உறவுகளில் அன்பையும் பரிவையும் மரியாதையையும் வளர்த்தெடுப்பது இன்றைய வரலாற்றுத் தேவையாகியுள்ளது.

**தமிழகப் பெண்கள் ஒருங்கிணைப்பு இயக்கம்.**

**இந்த அறிக்கைக்கு உறுதுணையாக இருந்த வெளியீடுகள் :**


1. Ghanshyam Shah, ***Caste, Hindutva and Hideousness*** Economic and Political Weekly, April 13, 2002

2. Riaz Ahmad, Economic and Political Weekly, Mumbai, May 18, 2002

3. People's Union for Democratic Rights, ***'Maro! Kaapo! Baalo!: State, Society and Communalism in Gujarat,***

4. K.Balagopal, Economic and Political Weekly, Mumbai, June 6,2002

5. Anuradha M.Chenoy,
Aman Ekta Manch Digest No.3, June 4, 2002

7. Kavita Punjabi, Krishna Bandhopadhyay and Bolan Gangopadhyay (supported by Citizen's Initiative, Ahmedabad),
***Report on the Impact of Gujarat Pogram on Children and the Young by an Independent Team of Citizens***

Medico Friends Circle, Pune, ***Carnage in Gujarat-A Public Health Crisis,*** First published in 2002

9. Syeda Hameed, Ruth Manorama, Malini Ghose, Sheba George, Fara Naqvi and Mary Theckckara ( Sponsored by Citizens Initiative, Ahmedabad),
Muslim Women's Forum, Delhi, 2002

நன்றி : தமிழக பெண்கள் ஒருங்கிணைப்பு இயக்கம்